# சிலுவையின் தாற்பரியமும், கிறிஸ்தவர்களின் சாக்ஷியும்.

திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆசிர பிரசுரம்.

# சிலுவையின் தாற்பரியமும் கிறிஸ்தவர்களின் சாக்ஷியும்.

---

திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆசிரம
பிரசுரம்.

---

1928
PRINTED AT THE N.M.S. PRESS
VEPERY, MADRAS

# முகவுரை

இச்சிறு புஸ்தகத்தில் சிலுவையின் தாற்பரியத்தைக்குறித்து வேதசாஸ்திர பொருளமைய சகல போதனைகளையும் அவைகளின் சாதனையையும் விவரிக்க நான் உத்தேசிக்கவில்லை. மேலும் சிலுவையைக் குறித்து இதர மதத்தாருக்குள்ளிருக்கும் தப்பான எண்ணங்களுக்கெல்லாம் காரணம் பூராவாக கிறிஸ்தவர்களின் குற்றமேவென்று எடுத்துக் காட்டி மிதமிஞ்சி என் உடன் கிறிஸ்தவர்களை குற்றம் சாட்டவேண்டுமென்றுமல்ல.

நம் தேசத்தார் கிறிஸ்தவர்களாகிய நம்மை ஏதோ விபரீதமான அந்நிய ஜாதியென்றெண்ணுவதற்கு நம்மாலுண்டான காரணங்களென்னவென்றும், இந்த நம்பி

லுள்ள இடையூறுகளை அகற்றி, எவ்வாறு சிலுவையின் மெய்யர்த்தத்தையும் அதின் வல்லமையையும் அவர்களுக்கு நாம் புகட்டி உத்தம சாக்ஷி பகரலாமென்றும் நம்மைநாமே ஆராய்ந்தறிவது மிக அவசியம். இதினால், நோக்கிய கருத்தையே லக்காகக் கொண்டு விஸ்தீரணமாயெழுதாமல் நான் சொல்வதில் பல காரியங்களைச் சுருக்கி என்னை மட்டுப்படுத்திக்கொண்டேன்.

எழுத்துப் பிரதியை வாசித்த சில நண்பர்கள் பின் வருபவை தமிழ் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, மற்றும் பல பாகங்களிலுள்ள கிறிஸ்தவ இந்தியர்களுக்கும் அவசரமானதால் ஆங்கிலத்திலும் இதைக் குறித்து எழுதச் சொன்னார்கள். ஆனால் என்னுடைய அற்ப ஜீவியம் சிறிது. இந்து தேசம் பெரிது. இதனால் முக்கியமாக என் வேலையை தமிழ் நாட்டிலேயே நான் பிரதானமாகச் செய்யவேண்டும். ஆண்டவர் பின்

சமயம் வாய்க்கச் செய்தால் ஒரு வேளை பின்னே அப்படி ஆங்கிலத்தில் இதைத் திருப்புகிறேன். ஆனால் ஆங்கிலம் கற்ற என் தமிழ் நண்பர் தற்காலத்தில் இகழப் பட்ட நம் தாய் பாஷையாகிய தமிழில் எழுதப்பட்ட ஒரு புஸ்தகத்தை வாசிப் பார்களோவென்று என் மனதில் சந்தே கம் சில வேளைகளில் உண்டாகிறது. இதினால் என் மனம் நொந்து வருந்து கிறது. எனினும், சத்தியத்தையும் தாம் சிநேகிக்கிற தமிழ் நாட்டின் மானிடத் திரளின் பூரண நன்மையையும் வாஞ்சிக் கிற பரம பிதா ஆங்கிலக் கல்வியினாலுண் டாகிய மனமுக்காடு நீங்கவும் நம் ஜனங்க ளின் கண்கள் திறக்கப்படவும் சீக்கிரம் கிருபை செய்வார் என்ற நம்பிக்கையோடு இதை எழுதியிருக்கிறேன். இதை வாசித்து நான் சொல்லியபவைகளிலிருக் கும் குற்றம் குறைகளை எனக்கு எழுதுங் கள். என் அருமை நண்பரே ! சாந்தி! சாந்தி ! சாந்தி ! ஓம் ! அனதி வார்த் தையாகிய பிதாவின் மடியிலிருக்கிற

ஒரே பேரான கடவுளின் சமாதானம் நமக்கருளப்படுவதாக!

சவரிருயன் ஏசுதாசன்.

கிறிஸ்து குல ஆசிரமம்
திருப்பத்தூர்
வட ஆற்காடு ஜில்லா
ஜூலை மாதம், 1928.

## சிலுவையின் தாற்பரியமும் கிறிஸ்தவர்களின் சாட்சியும்.

''நானோ நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைப்பற்றியே யல்லாமல் வேறொன்றையும்பற்றி ஒருக்காலும் பெருமை பாராட்டாதிருப்பேனாக'' கலாத். 6:14.

இந்த வருஷ துவக்கத்தில் வட இந்தியாவிலுள்ள ஒரு பெரிய கலாசாலையில் எல்லா வித்தியார்த்திகளும் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் தேசிக அன்பென்றால் என்னவென்பதைக் குறித்து பேசினேன். அங்கிருந்தவர்களில் பெரும்பாலர் இந்துக்களும் மகமதியருமான மாணவர், எல்லாருக்கும் நான் கிறிஸ்தவன் என்பது தெரியும். எனினும் மிகு கவனத்தோடும், அன்போடும் அமைதலாயிருந்து நான் சொல்வதை கேட்டார்கள். கூட்டம் முடிந்தபின் அங்கிருந்த

சில கிறிஸ்தவ மாணவர் என்னிடம் தனித்து வந்து "உங்களை இவ்வளவு மரியாதையோடு இந்த இந்து மகமதிய மாணவர் ஏற்றுக்கொண்டு செவி கொடுத்தது எங்களுக்கு மிக ஆச்சரியம். சில நாட்களுக்குமுன் ஓர் கிறிஸ்தவ தலைமை உபாத்தியாயர் வேறொரு பட்டணத்திலிருந்து இங்கு வந்து இப்பேர்ப்பட்ட கூட்டத்தில் இவர்களுக்கு உபந்நியாசம் செய்தார். அவர் பிரசங்கிக்க ஆரம்பித்தவுடன் அவர் கிறிஸ்தவரென்றறிந்திருந்த கூச்சலிட்டு பலவித குழப்பங்களையும் செய்து, அவரைப் பேசாமல் தடுத்துவிட்டார்கள்" என்று சொன்னார்கள். இதன்பின் ஒருநாள் அக்கலாசாலையில் படித்துக்கொடுக்கிற ஒரு சாஸ்திரியினிடம் இதை நான் சொல்லி இந்த இந்து மகமதிய மாணவர் காட்டிய அன்புக்காக என் உள்ளத்திலிருந்து நன்றியறிதலைக் காட்டினபோது அவர் "அது மாத்திரமல்ல, நீங்கள் சொன்னதைக் குறித்து அருமையாய்ப் பேசிக்கொண்டு 'ஐபோ

இவர் தன் அங்கியில் சிலுவையின் அடையாளத்தைப் போட்டிருப்பது எவ்வளவு துக்கமான காரியம்' என்று வருத்தப் பட்டார்கள்" என்று என்னிடம் சொன்னார். "சிலுவையின் அடையாளத்தை இவர் போட்டிருப்பது எவ்வளவு துக்கமான காரியம்"! ஏன் இப்படிச் சொன்னார்கள். இந்தக் கேள்வி என் காதில் தொனித்துக்கொண்டே யிருக்கிறது. இந்த இந்து, மகமதிய வாலிபருக்குச் சிலுவையின் தாற்பரியம் எவ்விதமாய்த் தோன்றிற்று ?

இக்கேள்விக்கு உத்தரவு சொல்லுமுன் பூர்வகாலமுதல் இந்நாள்மட்டும் சிலுவையின் தாற்பரியம் சரித்திரப் போக்காய் நாம் கவனிக்கும் விஷயத்தில் எவ்விதமாய் வேறுபட்டுக்கொண்டு வருகிறதென்பதைச் சற்று தியானிப்போம். நம் பெருமானாகிய கிறிஸ்து பலஸ்தீனா தேசத்தில் மனிதனாக வசித்தபோது ரோம ராஜ்ஜியத்தார் அத்தேசத்தை

வசப்படுத்தி ஆண்டுகொண்டிருந்தார்கள். ரோம துரைத்தனத்திலே கடும்பாதகர், கொலை செய்தவர் முதலிய குற்றவாளிகளை மிக அவமானமாக இம்சை செய்து தண்டிக்க வேண்டுமானால் தான் சிலுவை மரத்தில் அறைந்து கொல்லுவார்கள். ரோம பிரஜை அதாவது ரோம ஜன சமூக சிலாக்கியம் பெற்றவனைச் சிலுவையில் அறைவது மன்னிக்கக்கூடாத பெரிய குற்றமாய் எண்ணப்பட்டு வந்தது. ஒரு காலத்தில் ரோம பிரஜை ஒருவனை சிசிலி மாகாணத்தின் நியாயாதிபதியாகிய கேற்றலின் என்பவர் சிலுவையில் அறைந்து விட்டார். அதையவே சிசிரோ என்னும் வக்கீல் அவருக்கு விரோதமாய் பிராது செய்து கடூரமாய் குற்றம் சாட்டினார். தற்காலத்தில் தூக்குமரத்தில் ஒருவன் கொலை செய்யப்படுவது எவ்வளவு அவமானமோ, ரோமர் காலத்தில் சிலுவையின் மரணம் அவ்வளவு அவமானமுள்ளதாய்க் கருதப்பட்டுவந்தது. நம் தேசத்திலுள்ள ஆங்கிலேயர் ஒரு ஆங்கில மனு

ஷனைத் தூக்குமரத்தில் கொலைசெய்ய இலகுவாய் ஒப்புக் கொடுப்பார்களா? தங்களுக்கும் தங்கள் ராஜ்ஜியத்திற்கும் அதை ஒரு பெரிய அவமானமாக எண்ணி அதை விலக்கித் தடுத்துத் தங்கள் பெருமையைக் காத்துக் கொள்வார்கள்.

ரோமர் காலத்தில் சிலுவை என்கிற பதங்கூட அவமான மொழியாக எண்ணப் பட்டதாம். பெரிய குடும்பத்தார் அதை உச்சரிக்கக்கூட வாய் கூசுவார்களாம். சில வருஷங்களுக்கு முன்னே ஐரோப்பிய தேசத்தார் ஒருவரோடொருவர் யுத்தம் செய்து கொண்டிருக்கும்போது சிற்சில ஆங்கில வாலிப பக்தர் தம் சகோதரரைக் கொலை செய்வது பாவம் என்று சொல்லி யுத்தத்திற்குப் போக மறுத்தபோது ஆங்கில துரைத்தனத்தார் அவர்களைச் சிறைச்சாலையில் வைத்துத் தண்டித்தார்கள். அப்போது நான் இங்கிலாந்தி லிருந்தேன். இப்படிச் சிறைச்சாலைக்குப் போய் வந்த ஒரு

ஆங்கில நண்பனும் அவர் மனைவியும் நானுமாக ஒரு நாள் புகைவண்டியில் பிரயாணம் செய்யும்போது "மனச்சாட்சியினிமித்தம் யுத்தம் செய்ய மறுத்தவர்கள்" என்ற பதங்களை நான் சொல்லவும் அந்த அம்மாள் எனக்கு சைகை காட்டி அதைப்பற்றி பேசாமலிருக்கச் சொன்னார்கள். தன் கணவன் இப்பேர்ப்பட்டவர்களில் ஒருவர் என்று பக்கத்திலிருக்கிறவர்கள் கேட்டால் தங்களுக்கு அவமானமென்று நினைத்தார்கள். மேல் நான் கூறியபடி சிறைச்சாலையிலிருந்த வாலிப பக்தருக்கு இப்பேர் கொடுக்கப்பட்டது. சிலுவை என்னும் மொழியை உச்சரிப்பதுங்கூட ரோமர் காலத்தில் எவ்வளவு அவமானமாய் எண்ணப்பட்டதென்பதை காட்டவே இதை உதாரணமாகச் சொன்னேன்.

## கிறிஸ்துவின் ஜீவியத்தில் வெளியான சிலுவையின் கருத்து என்ன ?

"ஒருவன் என் சீஷனாக விரும்பினால் தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக் கடவன்" என்று எம்பெருமான் சிலுவையின் மரணத்திற்குள்ளாகு முன்னமே கூறினார். அவர் மனதில் சிலுவை பிறர் மேல் பொங்கும் அன்பிற்கும், அதின் பலனாக வரும் துயரத்திற்கும், சுயதியாகத்திற்கும், அடையாளமாக விருந்தது. அவர் பூலோகத்தில் செய்த ஊழியத்தின் நாட்கள் முடிவதற்கு சமீபம் ஆக, ஆக, சிலுவையின் மரணமும் தமக்குக் கிட்டக் கூடிவருகிறதென்பதை இலகுவில் தெளிவாகக் கண்டறிந்தார். ஏன் ?

அவர் பலஸ்தீனாவில் மானிட ரூபமாய் வசித்த காலத்தில் அத்தேச சபா சிரேஷ்டராகிய பரிசேயர், வேதபாரகர்,

சதுசேயர், பிரதான ஆசாரியர் முதலி யனோர் இவரை வெறுத்தார்கள். அரச ஞகிய ஏரோதும் இவருக்கு விரோதம். இவர் பிறந்தபோது ஏரோது இவரைக் கொல்லும்படி எத்தனை பாலகரைச் சிரச் சேதம் செய்தான்! பின் ஒரு தடவை அரசனின் விரோதத்தைக் குறித்து நம் பெருமானுக்குச் சிலர் சொன்ன போது இவர் அவ்வேரோதை "நரி" என்றழைத்து அவனைக் குறித்து யாதொரு பயமுமில்லாமல் பேசினரே. ரோமை ராஜ்ஜிய அரசாட்சியைக் குறித் தும் இவருக்கு யாதொரு நல்லபிப்பிராய மிருந்ததாக தோன்றவில்லை. "புறஜாதி யாருடைய (ரோமருடைய) அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிருர்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிருர்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்— உங்களுக்குள்ளே அப்படியிருக்க லாகாது" என்று சீஷரிடம் சொல்லி அவர்களை எச்சரித்தாரே. (மத். 20:25,

29) சபா சிரேஷ்டர்கள் இவர்மேல் கொண்ட பகையின் காரணத்தை சற்று நாம் விஸ்தீரணமாக கவனிக்கவேண்டும். " சிலுவையிலறையும், சிலுவையிலறையும்" என்று பிலாத்துவின் நியாயசனத்தின் முன் கூச்சலிட்டவர்கள் இவர்களல்லவா ? பரிசேயர், சதுசேயர், வேத பாரகர் முதலியோர் ஆயக்காரரைப் பாவிகளென் றழைத்து அவர்களோடு ஊண் உறவு சம்பந்தமில்லாமல் அவர்களை ஈனசாதியாக இகழ்ந்து விலக்கினார்கள். ஆனால் நம்பெருமானே ஆயக்காரர் பாவிகளோடு உறவாடி அவர்கள் வீட்டில் தங்கி உணவருந்தி சொந்தம் பாராட்டினார். ஸ்திரீகளையும் முக்கியமாக மாம்ச பலவீனத்தினால் தவறிப்போன பெண்களையும் அவமதித்து விலக்கி அவர்களை கடூரமாய் தண்டிக்க பரிசேயர் தீவிரித்தார்கள். ஆண்கள் இப்படிச் செய்யும் பாவங்களையோ பெரிதாக எண்ணாமல் கண் சாடையாய் விட்டுவிட்டார்கள். ஆனால் கிறிஸ்து பகவானே சகல இருதய

ரகசியங்களையு மறிந்தவர். அந்தரங்க பாவங்கள் அவர்முன் பகிரங்கமாய் பட்டப்பகல் வெளிச்சம்போல் தெரியும். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. முகதாக்ஷண்ணியமும் கிடையாது. பெண்ணின் பாவத்திற்கு ஆணால் வரும் காரணங்களை அவர்முன் மறைக்கக் கூடுமோ? பாவியான ஸ்திரியின் ஜீவியத்தைப் பரிசுத்தமாக்கி ஒரு பந்தியின்முன் அவள் தன் பாத முத்தி செய்ய இடம் கொடுத்தார். "இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையுமெய்யுமாய்ப்பிடிபட்டாளென்று" ஒரு ஏழைப்பெண்ணை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடம் கொண்டுவந்த போது "உங்களில் பாவமில்லாதவன் எவனோ அவன் முதலாவது இவன் மேல் கல்லெறியக்கடவன்" என்று அந்த கள்ள மனதுள்ள போதகர்களுக்குக் கூறினார். விதவைகளின் சகாயர்போல் தங்களைப் பாவித்து அவர்களை ஏமாற்றி அவர்கள் சொத்தை அபகரித்து மாய்மாலமாக வெளிக்கு ஜெபதபங்கள் செய்து தங்களை

பரம வைதிகர்போல் காட்டின இவர்கள் மாய்மாலத்தை பகிரங்கமாக நம் பெருமான் கண்டித்தார். உள்ளான தெய்வீக மறுபிறப்படையாமல் சடங்காசாரங்களை நுட்பமாயனுசரித்து நீதியையும் இரக்கத்தையும் அசட்டை செய்த இந்த கள்ளக் குருக்களைக் குறித்து மற்றவர்களை பலமாய் எச்சரித்தார். ஐசுவரியவான்கள் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது வெகு கஷ்டமென்று போதித்து தன்னிடம் வந்த ஓர் பெருஞ் சொத்துக்காரனை தன் ஆஸ்தியெல்லாம் விற்று தரித்தரிருக்குக் கொடுக்கச் சொன்னார். பார்த்தால் கல்வி யில்லாத ஓர் தச்சன் மகனிவர். இப்படி நம் நாட்டில் ஒருவரெழும்பி சபாசிரேஷ்டர், ஐசுவரியவர், துரைத்தனத்தார் ஒருவர் தயவையும் நாடாமல் சத்தியத்தையே மேலாக கைக்கொண்டு முகத்தாக்ஷண்ணியமில்லாமல் எவரையும் கண்டிக்க ஆரம்பித்து தேசிக, சபை ஆசாரங்களையும் சட்டை செய்யாமல் நடந்தால்

2

அவர் கதி என்னுகும்! பெரியோர், ஆஸ்திமான்கள், துரைத்தன அதிகாரி கள் சும்மா அவரை விட்டுவிடுவார்களா? சிறைச்சாலையும், தூக்குமரமும் அவரு க்கு கிட்டிவிடுமல்லவா? அப்படியே சிலு வை மரமும் இயேசுநாதருக்கு கிட்டிற்று. சத்தியத்தைக் குறித்து சாக்ஷி பகர பிறந்த அவர் அச்சத்தியத்தினிமித்தம் சிலுவை மரமேறினுர். தம்மை பின் பற்றுபவருக்கும் இப்படியே சிலுவை வந்து சேருமென்று நம் பெருமான் தெளி வாய் கண்டார்.

## அப்பேஸ்தலரும் சிலுவையும்.

கிறிஸ்துவுக்குப்பின் அப்போஸ்தலர் காலத்தில் சிலுவையைப் பற்றிய வேறொருவிதமான அவமானமிருந்தது, யூதர் நியாயப் பிரமாணத்தின் கிரியையினால் இரக்ஷிப்பைப் பெறலாமென்றார்கள். கிரேக்கர் தத்துவ ஞானத்தினால் அதை அடைய முயன்றார்கள். அப்போஸ்தலரோ சிலுவையில் பாதகன்போல் மரித்த கிறிஸ்துவின் மூலமாய் இரக்ஷிப்புண்டாகுமென்று பிரசங்கித்தார்கள். "யூதர் அடையாளத்தைக் கேட்கிறார்கள். கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அது யூதருக்கு இடறல், புறஜாதியாருக்கு பைத்தியம்." 1 கொரி 1:22, 23. கிறிஸ்துவின் அப்போஸ்தலருக்கோ சிலுவையி லறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் கிறிஸ்தவ சபைகள் அறியாதிரு

க்க வேண்டுமென்பது அவர்கள் வாஞ்சை. பவுல் அப்போஸ்தலனுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவைக்கொப்பான மேன்மை வேறொன்றும் கிடையாது. இச்சிலுவையின் மேன்மைக்காக அவர் சகல லௌகீக பாக்கியங்களையும் குப்பையென்று எண்ணி களைந்துவிட்டார்.

" இயேசுவின் அச்சடையாளங்களை நான் என் சரீரத்தில் சுமந்து கொண்டிருக்கிறேன். நானோ நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைப்பற்றியே யல்லாமல் வேறொன்றையும்பற்றி ஒருக்காலும் பெருமை பாராட்டாதிருப்பேனாக. அதன் மூலமாய் உலகம் எனக்கு சிலுவையிலறை யுண்டிருக்கிறது. நானும் உலகத்திற்கு சிலுவையிலறையுண்டிருக்கிறேன்."

பவுலப்போஸ்தலன் காலத்தில் ஐசுவரியவான்கள் அடிமைகளை விலைக்கு வாங்கி சொந்த வேலையாட்களாக வைத்

திருந்தார்கள். நம் நாட்டில் மாடுகள் யாருக்கு சொந்தம் என்று காட்ட சூடு போட்டு அவைகளின்மேல் அடையாளக் குறி காட்டுவதுபோல் அப்போஸ்தலன் நாட்களில் எஜமான்கள் தங்கள் அடிமை களின்மேலும் சூடுபோட்டிருப்பார்கள். சூட்டுத் தழும்புகளினால் இந்த அடிமை இன்னாருக்கு சொந்தமென்று தெரியும்.

அப்போஸ்தலன் தன்னை கிறிஸ்து வுக்கு சொந்த அடிமையென்று வருணிக்க இந்த உவமானத்தை உபயோகிக்கிறார். "இயேசுவின் சூட்டடையாளங்களை நான் என் சரீரத்தில் தரித்துக்கொண்டிருக்கி றேன்" என்று இதைத் திருப்பலாம். அப்போஸ்தலன் தரித்திருந்த சிலுவை யின் அடையாளங்களென்ன? "உழைப் பிலே அதிகம், காவல்களில் அதிகம், அடிகளில் அதிகம், மரண அவதிகளில் பலமுறை, ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் யூதர்களால் அடிபட்டேன்; மூன்றுதரம் பிரம்படிபட்டேன், ஒருதரம்

கல்லெறியுண்டேன், மூன்று தரம் கப்பல் சேதத்தில் அகப்பட்டேன், நடுக் கடலிலே ஒரு இராப்பகல் போக்கினேன், பிரயாணங்களில் பலமுறை, ஆற்றுமோசங்களில், கள்ளர் மோசங்களில், சுயஜாதி மோசங்களில், புறஜாதி மோசங்களில், நகர மோசங்களில், வனாந்தர மோசங்களில், சமுத்திர மோசங்களில், கள்ளச் சகோதரர்மோசங்களில், உழைப்புக்களைப்புகளில், கண் விழிப்புகளில் பலமுறை, பசிதாகங்களில், உபவாசங்களில் பலமுறை, குளிர் நிர்வாணங்களில் அதிகம், எல்லா சபைகளையும் பற்றியகவலை," இவைகளே அவர் அச்சடையாளம்.

"எபிரேயன், ஆபிரகாம் சந்ததியான், இஸ்ரவேலின் வம்சம், பரிசேயரில் பரிசேயன்," என் இவ்வித பூலோக பெருமையை முற்றிலும் துறந்து சிலுவையின் அவமானக் குறிகளை அப்போஸ்தலன் அணிந்துகொண்டார்? கிறிஸ்துவோடு உயிர்த்தெழுதலின் ஜீவனில் பங்குபெற ஆசித்ததினாலே. "கணப்பொழுதே நிற்

கும் நமது இலேசான உபத்திரவம் நித்தியகாலக் கன மகிமையை மென்மேலும் அதிகமாய் நமக்கு உண்டாகிறது. காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளையே நாம் நோக்கியிருக்கிறோம். ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியம், காணப்படாதவையோ நித்தியம். பூமிக்குரிய நமது கூடாரவீடு அழிந்து போகுமாயினும் கடவுளிடமிருந்து ஒரு கட்டடம், கையாலமைக்கப்படாத நித்திய வீடு, பரலோகத்தில் நமக்குண்டென்று அறிந்திருக்கிறோம்.'' இந்த சத்தியத்தை நிச்சயமாக அறிந்த அனுபவமே, இவரைச் சிலுவையின் அடிமையாக்கிற்று. பவுல் மனுஷருக்குப் பயப்படவில்லை. தன் உடன் கிறிஸ்தவர்களானாலும் சரி, பிரதான அப்போஸ்தலனானாலும் சரி, எவராவது சத்தியத்திற்கேற்றபடி நடக்கவில்லையென்று கண்டாரா, கிஞ்சித்தேனும் மனம் பதராமல் நேரே பேசி அவர்களை கண்டிப்பார். சபா சிரேஷ்டனாகிய பிரதான ஆசிரியன்

நீதி தவறி கட்டளை கொடுத்தபோது, அவனை "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே" என்றழைத்தார். மாம்ச இச்சைக்கும், பரிதானத்திற்கும் ஆளான பேலிக்ஸ் என்ற ரோமதுரைத்தன அதிகாரிக்கு, அவன் முன் கைதியாயிருந்த பவுல் "நீதியையும், இச்சையடக்கத்தையும், இனி வரும் நியாயத் தீர்ப்பையும் குறித்து," அவன் பயமடையும்படி தைரியமாய் பேசினார். தற்காலத்தில் ஓர் சுதேசியான சன்னியாசி நம்மேல் அதிகாரஞ் செலுத்தும் புறதேச ஆங்கில (கவர்னர்) அதிகாரியை அவர் இறுமென்று சொல்லி பரிதானம் வாங்குகிறதைக் குறித்தும், குதிரைப் பந்தயம் விட்டு ஜனங்கள் சூதாடி பணத்தை நாசம் செய்யும்படி செய்வதைக் குறித்தும் கண்டித்து நேரே எச்சரித்தால் அந்த சந்நியாசியின் கதி என்னுகும். அல்லது ஒரு துரைத்தன உயர் உத்தியோகஸ்தரின் துன்மார்க்க ஜீவியத்தைக் குறித்து அவர் நேரே கண்டித்துப் பேசினுல் அவருக்கு என்ன நேரி

டும்? பவுல் ரோமைச் சக்கிரவர்த்திக்கும் பயப்படவில்லை. அச்சக்கிரவர்த்திகளில் மிகவும் நிஷ்டூரனான ஒருவனை "சிங்கத்தின் வாய்" என்று சொல்லுகிறார். (II தீமோத்தெயு 4-17).

"கிறிஸ்துஇயேசுவுக்குள் தெய்வபக்தியாய் ஜீவிக்க விரும்புகிற யாவரும் இம்சைக்குள்ளாவார்கள்." பவுலும் தன் நாதனின் திருவடியை கடைசிவரையிலும், மரணபரியந்தம், பின் சென்றார். எல்லா மனுஷராலும், சிநேகிதராலும்கூட கைவிடப்பட்டவராய் ஓர் நாள் தனியே இவரை ரோமாபுரிக்கு வெளியே சில ரோம சிப்பாய்கள் கொண்டுபோனார்கள். ஒருவன் வெட்டுக் கத்தியை உயர்த்தித் தூக்கினான். சிலுவையின் நேசனாகிய அப்போஸ்தலனின் தலை வேறே, அங்கம் வேறேயாக விழுந்தது. ஆனால் அவர் ரத்த சாக்ஷி சர்வலோகமும் இன்னும் தொனிக்கிறது.

அப்போஸ்தலரும் அவர்களை யடுத்து அவர்களுக்குப் பின்வந்த ஆதி கிறிஸ்த

வர்களும் இச்சிலுவையினிமித்தம் எவ்வளவு அவமானத்தையும் எவ்வளவு இம்சையையும் சகித்தார்கள்.

பேதுரு தலை கீழாய்ச் சிலுவையில் அறையப்பட்டார். யோவான் பத்மு தீவுக்கு தீவாந்தரமாக அனுப்பப்பட்டுத் தனியே நலிந்து வதைந்தார். நீரோ என்னும் நிஷ்டூர ரோமஇராயன் காலத்தில் கிறிஸ்தவர்கள் வெளியிலே தலை காட்டவும் வழியில்லாமற் போயிற்று. பூமியின் கீழுள்ள குகைகளுக்குள்ளும் மறைவான விடங்களுக்குள்ளும் தங்கிக்கொண்டு கிறிஸ்தவர் தெய்வாராதனை செய்ய வேண்டியதாயிருந்தது. நெருப்பிலே எரிக்கப்பட்டார்கள், ரோம ஆட்டச்சாலையிலே காட்டு மிருகங்களால் பீறப்படும்படி எறியப்பட்டார்கள்.

“ காட்டிலே சிதறிப்போனோம்,
கடூரமாயடிக்கப்பட்டோம்
கேட்டுருகினவரில்லை
கேள்வி கேட்பாருமில்லை ”

என்ற வண்ணமாய் அவர்கள் ஸ்திதி யிருந்தது, நீரோ ஒருநாள் ரோமாபுரியை நெருப்புக் கொளுத்திவிட்டுக் கிறிஸ்தவர் களை ஜனங்கள் இம்சை செய்யும்படி அவர்கள் தான் கொளுத்திவிட்டார்க ளென்று அவர்கள்மேல் அநியாயமாய் குற்றஞ் சாட்டினான். போலிக் கார்ப் என்ற 87 வயதுள்ள வயோதிப கிறிஸ் தவன் ஒருவரை நெருப்பில் போடக் கொண்டு போனார்கள். நியாயாதிபதி இவர் வயோதிபத்தைப் பார்த்து இரக் கப்பட்டு "போலிக்கார்ப்" கிறிஸ்துவை மறுதலி, உன்னை விடுதலையாக்கி விடுகி றேன் என்று சொன்னான். "87 வருஷம் என் ஆண்டவனை நான் சேவித் திருக்கிறேன். அவர் எனக்கொரு அநியா யமும் செய்யவில்லை. எப்படி என் கர்த் தாவும் இரட்சகருமானவரை மறுதலிப் பேன்" என்று உறுதியாய்ச் சொல்லி நெருப்பில் தகனிக்கப்படும்படி தம்மை ஒப்புக் கொடுத்தார். வட ஆப்பிரிக்கா தேசத்திலே கிறிஸ்தவர்களுக்கு நேர்ந்த

பெரிய துன்பத்தில் 'பற்பச்சுவா' என்ற பெரிய தனவாட்டியும், அவள் அடிமை பெண்ணாகிய 'பெலிசித்தா' என்பவளும், தங்களைக் கொல்லும்படி நியமிக்கப்பட்ட பயங்கரமான காட்டு மிருகத்தண்டை கைகோர்த்துக்கொண்டு வெற்றி வீரிகள் போல் தைரியமாய் போனார்கள்.

'உலகம் அவர்களுக்கு பாத்திரமா யிருக்கவில்லை.' இப்படியாக சிலுவை ஆதி யில் சண்டாளரைத் தூக்கும் அவமதிப் பின் அடையாளமாயிருந்தது. பின்பு இகழ்ச்சி, இம்சை, கடூர மரணம், முத லியவற்றால் துயரடைந்த கிறிஸ்தவர்க ளின் மார்க்க அடையாளக் குறியாயிருந் தது.

## இந்த சிலுவை பிற்காலத்தில் கௌரவத்திற்கும், துரைத்தன மேன்மைக்கும் அடையாளமாய்விட்டது எப்படி ?

*கிறிஸ்து மரித்த சில நூற்றாண்டுகளுக்கு பின் ரோம ராஜ்ஜியத்தில் நான்கு கட்சிகள் உண்டாகிவிட்டது. ஒரு கட்சியின் தலைவன் 'கான்ஸ்டன்டையின்.' இவன் ஒருநாள் தன் எதிர் கட்சி ரோமத் தலைவனோடு யுத்தம் செய்யப் போகையில் மத்தியான வேளையில் வானத்திலே ஒரு காட்சியைக் கண்டானும். பிரகாசமான ஒரு சிலுவையையும் அந்த சிலுவையோடு "இக்குறியினாலே நீ வெற்றி சிறப்பாய்" என்னும் வாசகத்தையும் கண்டானும். அவன் சேனையும் இதைப் பார்த்ததாம். 'கான்ஸ்டன்டைன்' கிறிஸ்தவனானான். அவன் பிரஜைகளும் கிறிஸ்தவர்களானார்கள். கிறிஸ்து மார்க்கமும் துரைத்தன மேன்மையடைந்தது.*

இதுமுதல் சிலுவையின் குறி துரைத்தன மகிமை, யுத்தவெற்றி, இவைகளுக்கு அடையாளமாய்விட்டது. துரைத்தனங்களும் சேனைகளும் இந்தக் குறியை பெருமையாய் தங்கள் சொந்தமாக்கிக் கொண்டு தங்கள் கொடிகள் மேலும் தங்கள் யுத்த ஆடைகள் மேலும் தரித்து கொள்ளுகிறார்கள். நம் தேசத்தில் துரைத்தன தெய்வாலயப் பீடங்களின் மேல் வெண்கலச் சிலுவை மினுங்குகின்றது. சக்கிரவர்த்திகளின் கிரீட உச்சியில் வைரச் சிலுவை. பெருமாட்டிகள் கழுத்துகளிலும் சபைகளின் அத்தியக்ஷர்களின் அங்கிகளின் மேலும், பொற் சிலுவைகள். கோபுரங்களின் உச்சியில் சிலுவை. பற்பல உயர்ந்த ஆபரணங்கள், பட்டாடைகள் தரித்துக்கொண்டு சபை கூடும் கோவில்களிலும் இச்சிலுவையைக் குறித்துபிரசங்கங்களும்தியானங்களும், பலமாய் நடக்கின்றன. சிலுவையைப் பற்றிய பாடல்களுக்கும் கணக்கில்லை. இதுவுமல்லாமல் சிலுவையைக் குறித்துப்

பற்பல மூடவிசுவாசங்களும் உண்டு. எருசலேம் நகரில் பரிசுத்த கல்லறையின் கோவில் என்ற ஒரு ஸ்தலமிருக்கிறது. ரோமான் முதலிய சபையார் இதுவே கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப் பட்ட இடமென்று சொல்லுகிறார்கள். இதில் ஒரு பாகம் கிறிஸ்துவின் மரச் சிலுவையைப் பிற்காலத்தில் கண்டுபிடித்த இடமென்று காட்டுகிறார்கள். அம் மரத்துண்டின் ஒரு சிறிய குச்சியை ஓர் பெரிய சக்கிரவர்த்தி தன் சிலைக்குள் வைத்து அமைக்கும்படி செய்தானும். ஏதாவது ஒரு சரீர அபாயம் வருமென்று பயந்தால் அனேகர் சிலுவையின் அடையாளத்தைத் தங்கள்மேல் அல்லது மற்றவர்கள்மேல் வரைவார்கள். சிலுவையின் அடையாளம் போட்டு பேய் பிசாசை ஓட்டவும் பார்க்கிறார்கள். சிலுவைபோட்டு சாராயம்குடிக்கிறவர்களும் உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தேசத்திலும்சிலுவையைப் பற்றிப் பற்பல சந்தேகங்கள் புத்திமான்க

ளுக்குள்ளும் தத்துவஞானிகளுக்குள்ளு மிருக்கலாம். நம் தேசவேதசாஸ்திரங்க ளின்படி மோக்ஷா, அல்லது முத்தி யடைய ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், பக்திமார்க்கம், அதாவது அறிவு, கிரியை, அன்புபொருந்திய விசுவாசம் இம்மூன்று மார்க்கங்களின் மூலமாய் இரட்சிப் புண்டென்று போதனையுண்டு. யோகாப் பியாசஞ் செய்து தெய்வத்தோடு இணைக் கப்பட்டு ஒன்றாகி இச்சடலத்தினின்றும், அதின் பாவ ஸ்திதியிலிருந்தும் விடுதலை யடைந்து முத்தியடைய நம் தேச மகாத் மாக்கள் போதனை செய்கிறார்கள். அதுவு மல்லாமல் கடவுளுக்கு "ஆனந்தா" அதாவது சந்தோஷம் (சச்சிதானந்தக் கடவுள்) என்று பெயர் கொடுத்திருக்கி றார்கள். ஆனந்தமாகிய கடவுள் சிலுவை யின் மனவேதனை, இரத்த வேதனையை எப்படி அனுபவிக்கக்கூடும். அவர் ஆனந்த குணாதிசயத்தோடு இது ஒவ்வா தே என்று அவர்கள் தர்க்கிக்கலாம். கடவுள் ஆனந்தம்தான். ஆனால் கடவுள்

நம்முடைய மாதாவும், பிதாவுமானவர், இன்னொரு காரியம் நிச்சயம். இவ்வுல கத்தில் கடவுளின் மக்களாகிய நாம் துன்பசாகரத்தில் மூழ்கியிருக்கிறோம். கடவுள் நம்மேல் அன்பு கூருகிற மாதா பிதாவாயிருந்தால் நம்மோடு தம்மை ஒப்புரவாக்கிக்கொள்ளுவது நிச்சயமல்ல வா? இதனால்தான் ஆனந்தபகவானைப் பிதாவோடு ஏக மகிமைபொருந்தியிருந்த கிறிஸ்து தம் ஆனந்த ஸ்திதியில் அப்படி யேயிருந்துவிடாமல் நரனாக நலிந்து உயி ரவஸ்தைபுற்று சிலுவைமேலேறினார்.

ஆனால் இதைக்குறித்து விஸ்தரிக்க நானிப்போது உத்தேசிக்கவில்லை. என் முக்கியமான நோக்கம் என்னவென்றால், கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய தேசத்தாருக்கு நம்முடைய ஜீவியத்தி னாலும் நடபடிக்கையினாலும் எவ்வித மான சாட்சி கொடுக்கிறோமென்பதை ஆராய்வதே. நம் மூலமாய் அவர்கள் சிலுவையைக் குறித்துத் தப்பாயெண்ணு கிறதற்கு காரணங்களென்ன?

1. முதலாவது அவர்கள் மனதில் சிலுவையின் அடையாளத்தைப் பார்க்கும்போது இது நம் தேசத்தைப் பிடித்துத் தங்கள் வசமாக்கி நம்மேல் அதிகாரஞ் செலுத்துகிற இதர தேசத்தாராகிய ஆங்கிலருடைய மார்க்க அடையாளம். சிலுவையென்றால் பரதேச அரசாட்சி. சர்க்கார் கோவில்களில் சிலுவை கர்த்தருடைய பந்தி மேசையில் ஒரு மூலையிலிருக்கிறது. கோபுரத்தின்மேலே ஒய்யார மேன்மையாக ஆங்கில துரைத்தனத்தின் கொடி பறக்கிறது. இந்தியர் கீழாகத் தொண்டுசெய்யவும் ஆங்கிலேயர் மேலாக ஆளுகை செய்யவும் உதவிசெய்யும் யுத்தக்கருவிகளாகிய துப்பாக்கி முதலிய குறிகளோடு ஆங்கில சிப்பாய்கள் இந்தக் கோவில்களில் சிலுவைக்குமுன் தெய்வபூஜை செய்கிறார்கள். தன்னை வெறுத்துச் சுயமகிமையைத் துறந்து சுயமேன்மையையும் சுயஜீவனையும் நாடாமல் மற்றவர்கள்மேல் அன்பின் வெள்ளம் ஓட உயிரைக்கொடுத்த நம்பெருமானின் சிலுவை

மண்ணாசை, பொன்னாசை, துரைத்தன வாசைபிடித்து மற்றவர்மேல் அதிகாரஞ் செலுத்த விரும்புவோர் குறியாயிற்று. ஐயோ! ஐயோ! ஆங்கில சபா பிரேஸ்டர்களாகிய கண்காணிமாரும் குருக்களூம் சிலுவைகளை யணிந்துகொண்டு தம் சுய தேச அரசாட்சியாகிய ஆங்கில துரைத்தன அபிமாணிகளாக காட்டிக்கொள்வதைப் பார்த்திருக்கும் நம் தேசத்தார் இப்படிச் சிலுவையைக் குறித்துத் தப்பான எண்ணங்கொள்வது ஆச்சரியமல்ல. நம் பெருமானாகிய இயேசு சுவாமி ரோம ராஜ்ஜியத்தின் பிரதிநிதியாகிய பிலாத்துவின்முன் கொடுத்த சாட்சியை கவனத்தோடு வாசித்து சிந்திப்போம்.

“என் ராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியதல்ல”

2. சிலுவையைக் குறித்து இந்திய கிறிஸ்தவர்களாகிய நாம் நம் சுயதேசத்தாருக்குச் சுட்டிக்காட்டுகிற சாட்சி என்ன? நம் மூலமாய் அவர்கள் சிலுவையின் அடையாளத்தைக் குறித்து என்ன

நினைக்கிறார்கள்? அதின் தாற்பரியம் அவர்கள் நம்மைப் பார்க்கும்போது அவர்களுக்கு எவ்விதமாய்த் தோன்றுகிறது?

மேற்சொல்லிய கலாசாலையில் சில மகமதிய வாலிபர் என்னைப் பார்த்து உங்கள் கிறிஸ்தவர்களுக்குள் ஏழைகள்கூட ஏன் ஐரோப்பியர் மாதிரி உடுத்த உண்க விரும்புகிறார்கள் என்று கேட்டார்கள். சிலுவையின் மார்க்கத்தில் சேர்ந்தவர்கள் பரதேசத்தார்போல உடுக்க உண்க ஜீவிக்கப் பிரயாசிப்போர் என்பது நம் தேசத்தார் எண்ணம். இந்துக்கள் தங்கள் கோவில்களுக்குத் தெய்வ தரிசனம் காண அல்லது பூசை செய்யப் போகும்போதும், மகமதியர் தங்கள் பள்ளிவாசலுக்கு ஜெபம் செய்யப் போகும்போதும் ஐரோப்பியர் மாதிரி ஆடைகளை அணிந்துகொண்டா போகிறார்கள்? வீட்டில் அல்லது வெளியே வேலைக்குப் போகும்போது ஆறுநாளும் சாதாரணமாய் நம் வழக்கப்படி உடுத்துகிறவர்கள்கூட

ஏழாம்நாள் கர்த்தருடைய நாளென்று ஆலயத்திற்குச் செல்லும்போது ஐரோப்பிய உடைகளை அணியவும் சப்பாத்து மாட்டவும் தொடங்குகிறார்கள். சிலுவையின் மார்க்கம் வைதீகமார்க்கமாயல்ல உயர்தர உடை பொன் ஆபரணங்கள் தரித்துப் பூசைசெய்யும் லௌகிக சம்பந்தமான மார்க்கமாக நம் தேசத்தாருக்குத் தோன்றும்படி நடந்துகொள்ளுகிறோம்.

சிலவருஷங்களுக்குமுன் திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆசிரமத்தில் எங்களோடு வேலைசெய்யும்படி ஒருவாலிபன் வந்திருந்தான். ஆச்சிரம வைத்தியசாலையில் ஆயுதகிரியை, இரணவைத்தியம் செய்யும் இடங்களில், சீழ் இரத்தம் இவைகளினால் தீனமுண்டாகாதபடி, காலில் செருப்புமாட்டி அவ்விடங்களில் நடப்பது எங்கள் வழக்கம். மேற்சொல்லிய வாலிபனோ வெறுங்காலோடு நடப்பான். ஆனால் ஓய்வுநாள் காலையில் ஊருக்குள்ளிருந்த கிறிஸ்தவ கோவிலில் தெய்வ

ஆராதனைக்குப் போகும்போதோ காலில் சப்பாத்துமாட்டிக்கொள்ளுவான். உடை உடுத்தவும் உல்லாசமான நடைநடக்கவும் லௌகீக மாம்ச இச்சைகளை நிறைவேற்ற வும் நம் பிதாவின் வீடாகிய ஜெபஆலயம் தானு தகுந்த ஆடம்பர ஸ்தலம்?

மேலும் துரைத்தன விஷயத்தில் கிறி ஸ்தவ இந்தியர்களாகிய நாம் பரதேச ஆங்கில துரைத்தன கட்சியை சேர்ந்த வர்களாயும் அதின் பரிபாலனத்தை விரும்பி நாடுகிறவர்களாகவும் நம்மை இதர கட்சிக்கார கூட்டத்தாராக நம் தேசத்தார் எண்ணும்படி நாம் நடந்து கொள்ளுவதற்கு அநேக உதாரணங்களை நான் கூறக்கூடும். நம்மில் உயர் உத்தி யோகஸ்தர்களும் நாம் நம்முடைய தலை வர்களென்று அழைப்பவர்களும் இதர மதஸ்தாரோடே துரைத்தன விஷயங்க ளில் நாம் சம்பந்தப்பட வேண்டாம் என்று போதித்து அவ் விஷயங்களில் அவர்கள் நமக்குத் தீமை செய்வார்க

ளென்று நாம் சந்தேகிக்கும்படி நம்மை ஏவுகிறூர்கள். இதர கட்சியாக அவர்கள் அமைத்திருக்கும் கிறிஸ்தவ ஐக்கிய துரைத்தன சங்கங்களும் (Indian Christian Association) அச்சங்கங்கள் துரைத்தன விஷயங்களில் வெளிவிடுகிற தீர்மானங்களும் இதற்கு நல்ல உதாரணம். இதனிமித்தம் நம் தேசத்தாரும் நம்மைக் குறித்துக் கிறிஸ்தவர்கள் சுய தேசத்தாரை வெறுத்து ஆங்கில தேச அபிமானங்கொண்டவர்கள் என்று சந்தேகப்படுவதற்கு இடமாயிற்று. நான் மேற்சொல்லிய மாணவர்கள் ஆங்கில துரைத்தனத்தைக் குறித்து என்னேடே பேசின போது இது எனக்குத் தெளிவாயிற்று. அத்துரைத்தனத்தைக் குறித்து அவர்கள் கிறிஸ்தவர்களோடு பேசும்போது "உங்கள் துரைத்தனம்" என்றே சொல்லுவார்களாம்."

3. நம்முடைய தெய்வ ஆராதனை முறைகளைச் சற்றுக் கவனித்துப் பார்ப்

போம். நம்முடைய ஆராதனை வணக்க ஜெபபோங்குகள், கர்த்தருடைய பந்தி பூசை முறைமைகள் நம் தேசத்தாருக்கு எப்படித் தோன்றுகின்றன ? தமிழ்நாட்டுக் கவிகள், சொற் சுவை பொருட் பொருந்த இலக்கியநூல் தழுவி, மனம் பரவசமாகி உள்ளம்கனிய பாடியிருக்கும் பாட்டுகள் சிரேஷ்டம். தஞ்சாவூர் வேத நாயக சாஸ்திரி, பாளையங்கோட்டை கிருஷ்ணபிள்ளை, ஞானயுதம் சாமுவேல் ஐயர், மரியான் உபதேசியார், நாகர் கோவில் பக்தர்கள் முதலியோர் எவ்வளவோ அனலுடன் பாடியிருக்கும் பாட்டுகள் மெத்தவுண்டு. இவை தவிர நம் தமிழ் நாட்டு இந்து பக்தர்களாகிய மாணிக்கவாசகர், தாயுமானவர் முதலிய பலர் சரித்திரப் பிரகாரம் நம்பெருமானை அறியாதவர்களாயிருந்தும் ஆத்மபிரகாரம் அவரை உணர்ந்தவர்களாகப் பாடிய உள்ளத்தைக் கரைக்கும் பலகவிகளு முண்டு. 'திருவாசகத்துக் குருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற பழ

மொழியும் கேளாதவர் தமிழ்நாட்டில் உண்டோ ?

" எத்திக்குந்தானுகி என்னிதயத்தேயூறி
தித்திக்குமானந்தத் தேனேபராபரமே

எவ்வுயிருமென்னுயிர்போ லெண்ணியிரங்கவுநி
றெய்வவருட்கருணை செய்யாய்பராபரமே [ன்

நெஞ்சகமேகோயி னினைவேசுகந்தமன்பே
மஞ்சனநீர்பூசைகொள்ள வாராய்பராபரமே"

" தாயுமானவர் "

ஆசிரமபாமாலை 40-ம் பாட்டு.

ஆனால் ஐயோ அநேக கிறிஸ்தவர்கள் இவற்றையெல்லாம் இகழ்ந்து அகற்றி விட்டு ஆங்கில இராகங்களை விரும்பி வாஞ்சித்து தமிழ்க்கவி இலக்கியநூல் ஒழுங்குகளை அனுசரியாமல் விரோதமாக ஆங்கிலமுமல்ல, தமிழுமல்ல, என்று சொல்லத்தக்க ஐரோப்பிய பாஷையி லிருந்து மொழிபெயர்த்த பாட்டுகளைக் கோவில்களில் பாடுகிறார்கள். இவர்களுக்கு ஆங்கில பாட்டுகளை ஆங்கிலேயர் கவிநூல் முறைபடிபாட பழக்கமில்லாமை

யால், ஆங்கிலேயருக்கு இனிமையாயிருக்கும்படி பாடவுமுடியாது. தமிழ் இராக முறைப்படி தமிழ் பாட்டுகளையும் பாடத் தெரியாது. வெகுபரிதாபம்!!! கிறிஸ்தவ ஆலயங்களில் ஜெபங்களையும் சங்கீதங்களையும் ஒருவிதமாகக் குரலைவினோதமாக உயர்த்திக் கூச்சலிட்டுப் பாடுகிறார்கள். என் தகப்பனார் நான் சிறியவனாயிருக்கும்போது சொல்லியதை ஒருநாளும் மறக்கமாட்டேன். அவர்களுக்கு பாளையங்கோட்டையில் தாம்பரபரணி நதியோரத்திலிருக்கும் கச்சேரியில் சிரஸ்தார் வேலை. வேலை முடிந்து தன் இந்து சிநேகிதரோடு பாளையங்கோட்டைப் பெருவீதியிலிருக்கும் கிறிஸ்தவ கோவில் பக்கமாய் சாயந்திரம் வருவார்கள். அங்கே ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த பாட்டுகளும், சங்கீத சான்றுகளும் (Chants) பாடுவார்கள். என் தகப்பனார் "நம் கோவிலுக்கு சமீபத்தில் வரும்போது பயந்துகொண்டு வருவேன். ஒரு வேளை கோவிலில் பாட்டுகள் பாடிக்

கொண்டிருப்பார்களோ? ஐயோ! என் இந்து சகோதரர் ஏதோ விகாரமான கோரசப்தம் என்று நினைப்பார்களே" என்பார்கள், கடந்தவருடம் ஒரு விவாக ஆராதனைக்குப் போனேன். பாதிரிமார் தமிழ்மக்கள். சிற்சில ஐரோப்பிய நண்பர் தவிர, சபையாரெல்லாரும் தமிழ் மக்கள். முழங்காலூன்றி ஆங்கிலப்பாட்டுப் பாடினார்கள். கிண்ணரப்பெட்டி வாத்தியத்தோடு ஏழுதடவை ஆமென் என்று குரலெழுத்தார்கள். சில இந்து தனவான்களும் கோவிலிலிருந்தார்கள். நான் தலைகவிழ்ந்து துக்கித்தேன். நம்மார்க்க ஜெப சடங்காசாரங்களைக் குறித்து இவர்கள் மனதில் என்ன பட்டதோவென்று என் உள்ளம் தவித்தது.

பவுல் அப்போஸ்தர் கொரிந்தியர் 14-ம் அதிகாரத்தில் எழுதியிருப்பதை நாம் நிதானித்து உணரவேண்டும்.

" சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடி வந்து எல்லாரும் அன்னியபாஷைகளிலே

பேசும்போது..................அவ்விசுவாசிகள் உள்ளே பிரவேசித்தால் அவர்கள் உங்களைப் பயித்தியம் பிடித்தவர்கள் என்று சொல்லுவார்களல்லவா? எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லுகையில் (அதாவது ஜனங்களுக்கு விளங்கும் பாஷையில் பேசுகையில்) அவ்விசுவாசி ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும் நிதானிக்கப்பட்டு மிருப்பான். அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியாகும், அவன் முகங்குப்புறவிழுந்து கடவுளைப் பணிந்துகொண்டு கடவுள் மெய்யாய் உங்களுக்குள்ளேயிருக்கிறார் என்று அறிக்கையிடுவான்.''

நம்முடைய கிறிஸ்துவின் சிலுவை மார்க்கத்தை நம் தேசத்தாரோடு அவர்களுக்கு விளங்குகிற பாஷையில் (அதாவது அவர்கள் இயல்பாக உணர்ந்தறியும் பாவனை முறையில்,) பிரசங்கிக்கிறோமா அல்லது அன்னிய பாஷையாகிய அன்னிய ஆசார பழக்கங்களை யனுசரித்து

அவர்களோடு பேசுகிறோமா? வார்த்தை மாத்திரம் தமிழில் இருந்தால் போதுமா? ஆராதனை முறைகள், சடங்காசாரங்கள், இராகங்கள், நம் வைதீகப் போங்குகள், தேசிக பாரம்பரிய கலைக்கும், ஜனங்கள் மனதைக் கவர்ந்து அவர்கள் கிறிஸ்துவை அன்னிய தேவதையாக எண்ணுமல் தங்களுக்குச் சொந்தமாக அறிந்து விசுவாசிக்கிறதற்கும் ஏதுகரமாயிருக்கவேண்டாமா ? நாம் ஆராதனை செய்து கொண்டிருக்கும்போது, இந்து பக்தர்கள் நம் ஆலயத்தில் உட்பிரவேசித்தால் அவர்கள் உள்ளம் பரவசமாகி அவர்கள் நம்மைக் குறித்து "தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே யிருக்கிறார்" என்று சொல்லும்படி நாம் கடவுளை ஆராதிக்கிறோமா அல்லது அவர்கள் மனதில் வேறேவிதமான எண்ணம் உண்டாகிறதா ? நம்மை நாமே ஆராய்வோம். நம்முடைய வைதீக சடங்காச்சார முறைமைகளில் நம் தேசத்தாருக்கு இடறலாயிருக்கிறவைகளை அகற்றிவிடுவோம்.

1. நம் தேசத்தார் நம்மை இதர மதமெல்லாம் பொய் என்றிகழ்ந்து அதை அநுசரிப்பவர்கள் அஞ்ஞானிகள் என்று சொல்லித் தாங்களே சர்வ சத்தியத்தையடைந்த மேலான மெய்ஞ்ஞானிகளென்றெண்ணி கௌரவம் கொள்பவர்கள் என்றெண்ணுகிறார்கள். சர்வதேச, சர்வ சமயத்தாரின் ஐக்கியம் (International fellowship) என்று புதிதாய் ஏற்பட்ட சங்கம் ஒன்று இருக்கிறது. இதன் ஆலோசனைக் கூட்டம் ஒன்று இந்த வருஷத் துவக்கத்தில் சபர்மதியிலிருக்கும் சத்திய கிரக ஆச்சிரமத்திலே நடந்தது. அச்சமயத்திலே நானும் அவ்விடமிருந்தேன். இந்தச் சங்கத்தின் அங்கங்கள் ஒருவரோடொருவர் ஐக்கியமாயிருக்கவும் பற்பல பாஷையோரும், சமயத்தோரும் தங்கள் தங்கள் பிரிவினைகளை மறந்து அன்பும் ஐக்கியமுமடையச் செய்யும்படி மேற்சொல்லிய அங்கத்தினர் வைதீக விஷயங்களில் ஒருவருக்கொருவர் எவ்விதமாய் நடந்துகொள்ள வேண்டுமெ

ன்றும், இச்சங்கத்தின் வைதீக நோக்க மென்ன என்பதைக் குறித்தும், ஒருநாள் பலர்பேசி ஆலோசனை செய்தார்கள். பல கிறிஸ்தவர்கள், ஐரோப்பிய மிஷனரி மார், இந்துக்கள், மகமதியர் முதலிய இச் சங்கத்தின் அங்கத்தினர் இக் கூட்டத் திற்கு விஜயம்செய்திருந்தார்கள். ஆனால் மகாத்மா காந்தி பேசினபோதும், மற்ற இந்து சகோதரர் பேசினபோதும் ஒரு காரியம் எனக்குத் தெளிவாயிற்று. மார் க்கபேதம் பிடித்துத் தாங்களே சர்வ சத்தியமு மடைந்த வேதபுலவர்கள் என்று கௌரமாய் எண்ணிக்கொள்ளுகிற வர்கள் கிறிஸ்தவர்கள் என்பதே நம் தேசத்தார் அபிப்பிராயம்.

மற்றவர்கள் பாவத்தைத் தன் பாவ மாகப் பாவித்து மற்றவர்கள் மேலுள்ள அன்பினால் அவர்கள் மனமாறிச் சீர் பொருந்தத் தன்னைத்தானே உபவாசத்தி னாலும் மனவேதனை துன்பத்தினாலும் ஒடுக்கினவரும், தரித்திரரோடு தன்னை

ஒன்ருக்கினவரும், அவர்களுக்குக் கிடை யாத ஆகாரமோ, ஆடையோ அவற்றை நானும் அணியேன் என்று விரதம் கொண்டு தரித்திரகோலம் பூண்டு தன்னைத்தான் வெறுத்தவரும், தீமையை வெறுத்தாலும் தீயோரை வெறுக்காது அன்புகொண்டு தாழ்மையின் கோலம் பூண்டு சுத்தஜீவியாக விளங்குபவருமான மகாத்மாகாந்தியின்முன் பெருமையாகப் பேசவோ நடக்கவோ யாருக்கு இயலும்? தெய்வ பிரசன்னத்தை நன்குணர்ந்து சுத்த ஜீவியம் செய்யும் ஒரு இந்து வாலிபனேடும் அங்கே பழகினேன். கிறிஸ்துவின் தாழ்மைக் கொக்க அவ் வாச்சிரமத்தில் உயர் ஜாதியினராகிய வாலிபர் கக்கூசில் தோட்டி வேலை செய்வதையும் என் கண்ணுல் பார்த்துப் பரவசமானேன்: அதிகாலையிலே 4-மணிக் கெழுந்து அதன்பின் ஆற்ருேர ஜெபஸ்தலத்தில் கூடி அவ்வாச்சிரமத்தோர் செய்கிற ஜெப ஆராதனையும் பார்த்தேன். கிறிஸ்தவர்களாகிய எங்

களுக்கு அவர்கள் காட்டின அன்பையும் உபசாரத்தையும் நான் எளிதில் மறக்க மாட்டேன். கிறிஸ்தவர்களாகிய எங்களை யும் தங்களைப்போல் தெய்வன்பினுல் ஏவப்பட்டவர்களாகப் பாவித்து தங்கள் ஜெபவேளையில் எங்களையும் கிறிஸ்தவப் பாட்டுகள் பாடச்சொன்னார்கள் போஜ னம் அருந்தும் சமயத்திலும் மற்றெல்லா சமயங்களிலும் ஒருவித்தியாசம் காட்டா மல் நடந்துகொண்டார்கள். இவர்கள் முன்பாக நாங்கள், " நீங்கள் அசத்தியர் நாங்களோ

சத்தியத்தின் மேலானபாதை கண்டோம்
சாங்கமாய் உலகத்தைத் தள்ளிப்போட்டோம்
பித்தர்களின் சாஸ்திரத்தைக் குலைத்துவிட்
டோம் "

என்று கௌரவமாய்ப் பாட எங்க ளுக்கு நாவெழுமா ? நம் பெருமானின் சிலுவையின் பாதையைத் தொடாமலும் சுய வெறுப்பில்லாமலும் தெய்வன்பின் வெள்ளமோட உள்ளமுவந்து நம் தேசத் தாருக்கென்று ஜீவிக்காமலு மிருந்து

தங்களைத் தங்கள் வீட்டை தங்கள் பிள்ளைகளையன்றி பிறரை நினைக்காதநாம் நம் தேசத்தார் முன் பெரிய பேச்சுப் பேச நீதமுண்டா? அவர்கள் சுதேச சுயஜன அபிமானங்களுக்காக எத்தனை தடவைசிறையிருப்பு எத்தனை அவஸ்தை சகித்தனுபவித் திருக்கிறார்கள்.

"என் அருள்நாதா இயேசுவே
சிலுவைக்காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே"

என்றும்,

"என் மீட்பர் சிலுவையல்லால்
வேறெந்த நான் பாராட்டுவேன்."

என்றும் இப்படிப்பட்ட ஆங்கில பாட்டு களை எவ்வளவுலகுவாய் பாடிவிடுகிறோம். தன்னைவெறுத்துச் சிலுவையையெடுத்துக் கிறிஸ்து பகவானைப் பின்பற்றுகிறோமா? அவர்பேரை நாம் அணிந்து கிறிஸ்தவர் கள், அதாவது கிறிஸ்துவை உடையவர் கள், என்று நம்மை அழைத்துக்கொள்ளு

கிரேமே! நம் பெருமானுக்கு நாம் அநி யாயம் செய்வது தகுதியல்ல. ஒன்றில் பேருக் கேற்க நடக்கப் பிரயாசப்படு வோம். இல்லாவிடில் அவர் பேரால் நம்மை வருணிக்க நம் வாய் கூசட்டும்.

மகாத்மாவாகிய பவுல் அப்போஸ்த லன், கர்த்தருக்கென்று ஆத்ம ஆதாயம் செய்ய மிக ஊக்கமாய்ப் பலவித துன்பங் களையு மடைந்து உழைத்து தம் ஜீவனை ஊற்றியவர், தம் வயோதிப காலத்தில் வாசிக்கிறவர்கள் உள்ளம் உருக்கத்தக்க தாக தாழ்மையோடு தீமோத்தேயுவுக்கு எழுதியிருப்பதை வாசித்து உணர்வோம். "என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தின படியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்து கிறவனும், கொடுமை செய்கிறவனுமா யிருந்தேன்; அப்படியிருந்தும், நான்

அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம்பெற்றேன். நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவிநான். அப்படியிருந்தும், நித்தியஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படி இரக்கம் பெற்றேன்.'' (1 தீமோ. 1—16)

''கள்ளமுறுங் கடையேனும் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகந் தருள் பொழியும் விமலலோசனநிதியை

உள்ளமுவப் புறு தேனை யுயிர்க்குயிரை யுல
வாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக்
கண்டேனே.

பொய்த்திருக்கும் வஞ்சனையும் பொல்லாங்கும்
புறங்கூற்றும்
எத்திருக்கும் முடையேமை யெண்ணியொரு
பொருளாகப்
பத்திருக்கும் பிரமாணப் படியொழுகி வினை
முடித்த
சித்திருக்குஞ் செழுந்தவனைச் சிலுவைமிசைக்
கண்டேனே.''

என்று கிருஷ்ணபிள்ளை பாடியிருக்கிறார். அப்போஸ்தலர்களி லெல்லாம் பிரதான அப்போஸ்தலன் என்று மேன்மையாய் நாம் சொல்லத்தக்க பவுல் மகாத்மா இப்படித் தம்மைத் தாழ்த்திக் கிறிஸ்துவின் விசுவாச பக்தியடையாத மற்றவர்களிலும் தம்மை இகழ்வாக எண்ணிப் பாவிகளில் பிரதான பாவி என்று சொல்லுகிறார். இப்படிப்பட்ட பாவியை இரக்ஷித்தவர் மற்றவர்களை இரக்ஷிப்பது எவ்வளவு

நிச்சயம் என்று தம்மை உதாரணமாகக் கூறுகிறார். இப்படியிருக்க, நம் தேசிக ளாகிய இதரமத பக்தர்களுக்கு முன் நம்மை உயர்த்தி மேன்மை பாராட்டுவது தகுதியோ ?

சாது சுந்தர் சிங் ஐரோப்பாவிலிருந்த போது அம்மேற்கு தேசங்களிலிருந்து இந்தியா தேசத்திற்குக் கிறிஸ்துவின் சுவிசேஷ பிரபல்ய வேலைக்கென்று எப்படிப்பட்ட ஊழியர்களை ஐரோப்பிய மிஷனரி சங்கத்தார் இங்கு அனுப்ப வேண்டுமென்றதைக் குறித்து ஒரு யோசனை சொன்னார். அவர் சொன்னதாவது:— "இந்தியாவுக்கு வேதசாஸ்திரம் தேர்ந்த நிபுணர்கள் அவசியமில்லை. இந்தியாவில் தத்துவ ஞானத்திற்கு குறைவில்லை. ஞான சாஸ்திரிகளுக்குத் தேர்ந்த எதிர் ஞானங்களைப் புகட்டி சுருதிக்குச் சுருதி கூறத் தக்க பண்டித சிரேஷ்டர்கள் அநேகருண்டு. ஆகையால் எங்கள் தேசத்திற்கு

ஐரோப்பாவின் ஞானங்கள் அவசரமில்லை. ஆனால், இந்தியாவுக்கு கிறிஸ்துவின் சாயலணிந்து அவரைப்போல் ஜீவிக்கும் சாதுக்கள், பரிசுத்தவான்களை அனுப்புங்கள் என்பதே.'' நம் தேசத்திற்கு வந்து சுவிசேஷ பிரபல்ய வேலை செய்ய ஆசித்த ஓர் ஆங்கில வாலிப பாதிரியார் நம் தேச மகா கவியாகிய ரபீந்திர நாத் தகோருக்கு கடிதம் எழுதி ஆலோசனை கேட்டார். அப்போது கவி அவருக்கு பதில் இவ்வாறு எழுதினார்:— "எங்கள் தேசத்தில் கிறிஸ்துவின் சாயலை அணிந்து அவரைப்போல் ஜீவிக்க உமக்கு ஆசையுண்டானால் தாராளமாய் வாரும், சந்தோஷம். ஆனால் எங்களுக்குப் போதகம்செய்வது மாத்திரம் உமது முக்கிய நோக்கமாயிருந்தால் வரவேண்டாம்'' என்பது. சில மாதங்களுக்கு முன் இலங்கைத் தீவில் மகாத்மா காந்தி கூட்டங்கள் நடத்தும்போது அவரைச் சில சுவிசேஷ ஊழியர் "இந்தியா கிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டுமானால் நாங்

கள் என்ன . செய்யவேண்டும் ?" என்று கேட்க மகாத்மா "கிறிஸ்துவைப்போல ஜீவியுங்கள். மலைப்பிரசங்கத்தின்படி நடவுங்கள்," என்று மறுமொழி பகர்ந்தார்.

நம் தேசத்தில் மிகச் சிரேஷ்டமான இம்மூவரும் ஏகோபித்து ஒரே வாக்காய்ச் சொல்லும் இவ்வசனத்தை நாம் அலக்ஷியம் செய்யத்தகாது. நம் பெருமானின் வசனத்தைக் கேளுங்கள் :—"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் ; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. (மத். 5:14) இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது." (மத். 5:6) "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி : கர்த்தாவே,

கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளை துரத்தினோமல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோமல்லவா? என்பார்கள். அப்பொழுது நான்: ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்." (மத்.7:21-23).

## கிறிஸ்துவைப்போல் ஜீவிப்பதென்றுலென்ன ?

காரியம் இப்படியிருக்க, கிறிஸ்துவைப் போல் ஜீவிப்பதே, சிலுவையின் தாசரின் ஜீவியமே, எல்லாவற்றிலும் சிரேஷ்டமான சாக்ஷியாயிருக்கும்படிசெய்ய கிறிஸ்துவின தாசராகிய நம்மேல் விழுந்த கடமையென்ன ? கிறிஸ்துவைப்போல் ஜீவிக்கிறதின் தாற்பரியம் என்ன ? " ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினுல் (அதாவது ஒருவன் என் பாத படியில் நடந்து என்னைப்போல் இவ்வுலகத்தில் ஜீவிக்க விரும்பினுல்) அவன் தன்னைத்தான் வெறுத்துத் தன சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின் பற்றக்கடவன்." சிலுவையை எடுத்த கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்போம். அப்போது அவரைப்போல் ஜீவிக்க விரும்புவோன் செய்யவேண்டிய கடமை தெளிவாகும்.

(1) தரித்திர புருஷன்: சிலுவையி சைக் காண்கிற அவர் எவ்வண்ணம் பூமி யில் உதித்து அவதாரமானார்? அவர் தரித்திரக்கோலம் பூண்டார். ஏன்? பூமி யில் தெய்வமக்களில் ஏராளமான மனு ஷத்திரள் தரித்திரர். ஏழைகளோடு தம்மை ஒன்ருகப் பாவித்துக்கொண்டார். தரித்திரரின் கவலைகளெல்லாம் அவ ருக்கு நன்ருய்த் தெரியும்.'' என்னத் தைப் புசிப்போம், என்னத்தைக் குடிப் போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள் '' என்று அவர் சொன்னபோது நாசரேத்தூரில் ஏழைத் தச்சனுய்த் தாய் தகப்பனேடு அவர் அனுபவித்த கஷ்டக்கவலைகள் அவருக் குத் தெரியும். ஒரு ஐசுவரிய வாலிபன் அவரிடம் வந்து நித்திய ஜீவனையடைய நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டபோது, "உன் ஆஸ்தியை விற் றுத் தரித்திரருக்குக் கொடு. அதன் பின் வந்து என்னை பின்பற்று'' என்ருர். நம் தேசத்தில் இருக்கிற தரித்திரம்

கொடியது. அரை வயிறுப் குடிக்கக்கூழ் கூட இல்லாமல் வருந்துகிற எத்தனையோ லக்ஷக்கணக்கான பேர் நம் தமிழ் நாட்டிலேயே இருக்கிறார்கள். திருப்பத்தூர் தாலுகாவில் ஜனங்கள் "கழிவேளை, கஞ்சிவேளை," என்று நாளை இரண்டாகப் பிரித்துப் பேசுகிறார்கள். ஆனால் "கஞ்சி வேளை" என்று சொல்வது அநேகர் வாயில் மரியாதைச் சொல் தவிர வேறேயில்லை. "கஞ்சியாவது, கிடைக்கிறதாவது!" வயிறு நிறையக் கேவறு கூழ் கிடைக்கிறதே கஷ்டமாயிற்றே! வருஷத்தில் ஆறு மாதம் மழையில்லாத போது வயல்கள் காயவே, வேலை கிடையாது. குடிக்கத் தண்ணீர் கிடைப்பது அரிது. உடுக்கக் கந்தைதான். உண்ண ஆகாரம் கிடைப்பது கஷ்டம். "அரை வயிற்றுக்காரர்" என்று அவர்களே தங்களைக் குறித்து என்னிடத்தில் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறார்கள். இதினால் தான் ஆச்சிரம சம்பந்தமாய் நாங்களும் ஜனங்களுக்குப் பிழைப்புண்

டாக எங்களாலான மட்டும் விவசாய வேலையும் நடத்தி வருகிறோம். இதினால் தான் மகாத்மா காந்தியும் இராட்டினத்தில் நூல் திரித்துக் காய்ந்த காலங்களில் ஏழைகளுக்கு பிழைப்புண்டாக அவர்களுக்கு உதவி செய்யும்படி எல்லாரையும் கதர் உடுக்கச் சொல்லுகிறார். நம் தேசத்திற்கு "தரித்திர நாராயணன்" என்று பேர் கொடுத்திருக்கிறார். நம் நாட்டார் இப்படியிருக்க, நம் பெருமான் இப்பவும் தமிழ் நாட்டுக்கு மானிட அவதாரமாய் வந்தால் எப்படி வந்துதிப்பார்? கிறிஸ்தவர்களாகிய நாம் சுய சொத்தையும், சுய உல்லாசத்தையும், சுய சௌக்கியத்தையும் நாடி, விலையேறப்பெற்ற ஆடையாபரணங்களை அணிந்து, மேலான போஜனங்களை அருந்தி, ஜீவிப்போமானால் எப்படி அவர் தொண்டராய் விளங்குவோம்? தேசாபிமானத்தால் இதர ஐரோப்பிய நாட்டார் தங்கள் சுய ஜனங்களுக்காக எவ்வளவோ தங்கள் பணங்களையும் ஆஸ்தியையும் செலவழிக்கிறார்

களே! சில நாட்களுக்குமுன், ஆங்கில நாட்டு துரைத்தனக் கடன் குறையும்படி, ஓர் ஆங்கில தனவான் லக்ஷக்கணக்கான பணம், பேர் சொல்லாமல் கொடுத்திருக்கிறார்! அவ்வளவு சுயதேச அபிமானமவர்க்கு! ஐயோ! சிலுவையின் காட்சி கண்ட நாம், கிறிஸ்துவின் அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் குப்பையென்று எண்ணின மகாத்மாவாகிய பவுலின் சுய வெறுப்பையும் கிறிஸ்துவைப் போன்ற ஜீவியத்தையும் மேன்மையாக எண்ணுகிற நாம், நம் பெருமானுக்கு அருமையான இந்த ஏராளமான ஏழைத் தமிழ் ஜனத்திரளுக்காக நம் ஆஸ்தியையும் பணத்தையும் செலவழிக்க ஆயத்தமாயிருக்கிறோமா? அவர்களுக்காக நாம் தரித்திரகோலம் பூணச் சித்தமாயிருக்கிறோமா? "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்ப

டிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரா னூரே.'' (2 கொரி. 8:9).

(2) இரண்டாவதாக, சிலுவையில் ஜேகஜோதியைப் பார்க்கிறோம். "உலகத்திலே வந்த எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.''(யோ.1:9). என் உடன் கிறிஸ்தவர்களே! நம்மையும் நம் பூர்வீகத்தையும் சற்று நினைப்போம். அறிவீனத்திலும் அந்தகாரத்திலும் மரண இருளிலுமிருந்த நம் பிதாக்களுக்கு ஜெகஜோதியாகிய சிலுவையின் நாதரது வெளிச்சம் பிரகாசித்தது. அவர் வெளிச்சத்தில் நாம் வெளிச்சம் கண்டோம். இப்போது சற்று நம் சுயநாட்டாரின் ஸ்திதியைக் கவனிப்போம். நம் தேசத்தில் கல்வி கற்றவர்கள் நூற்றுக்குப் பத்துப் பேரிருக்குமோ வென்பது சந்தேகம். தமிழ் பேசுகிறவர்கள் உத்தேசம் 220 லக்ஷம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் 100க்கு 90 பேர் கிராம வாசிகள்.

தமிழ் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் 100க்கு 7 பேர் ஆண்கள் 1000க்கு 7 பேர் பெண்கள். உயர்தரக் கல்வி கற்றவர்கள் இந்த 220 லக்ஷத்தில் 100க்கு 1 கூட இருக்குமோவென்பது சந்தேகம். உயர்தரக் கல்விகற்ற நாமும் ஆங்கிலத்தில் கல்விகற்றுவிட்டு ஆங்கிலபாஷையை வழங்கி அதிலேயே நினைத்து நம்மைப்போலொத்த ஆங்கிலக்கல்வி கற்றவர்களோடு சகவாசம் செய்து ஆங்கிலக்கல்வியில்லாத நம் சுய ஜனங்களுக்கு விலகி ஜீவிக்கிறோம். கிராமத்தாரின் அறிவீனம் அதிகம். பள்ளிக்கூடங்கள் சொற்பம். ஜனங்களை முன்னுக்குக் கொண்டுவர அபிமான அனலுள்ள உபாத்திமார் வெகு கொஞ்சம். உயர்தரக் கல்விபெற்ற நாம், கற்ற ஆன்ம சரீர சத்தியங்களின் அறிவில் நம் நாட்டாரும் பங்கு பெற அவர்களுக்குச் சுயபாஷையில் அவற்றை கற்றுக்கொடுக்க என்ன பிரயாசம் எடுக்கிறோம்? அவர்கள் அறிவீனத்தை நம் அவமானமாகப் பாவித்து அங்கலாய்க்கி

ரேமா? அல்லது, துரைத்தனத்தில் வயிறு பிழைப்பதற்கு நம் பாடு தீர்ந் தால் போதுமென்று தன்னயம்கொண்டு, நம் நாட்டவர்க்கு நம்மை அந்நியராக்கும் ஆங்கிலபாஷையையே பிரதானமாக நாடு கிரேமா? எத்தனை கிறிஸ்தவகுடும்பங்க ளில், ஐயோ! ஆங்கிலத்தை தங்கள் பிள் ளேகள் சிறு வயது முதல் தாய் பாஷை யாக பேசக் கற்பித்து சுய பாஷையை நன்கு அறியாத தங்கள் பிள்ளேகளே தங் கள் சுய நாட்டாருக்கு அந்நியராக்கி விடு கிறார்கள்? இப்பிள்ளேகள் வளர்ந்து ஆங் கிலமறியாத தங்கள் சுயநாட்டாருக்கு எவ்விதம் சேவகம் செய்வார்கள்? இவர் கள் பாட்டும், படிப்பும், நினைவும், குடும்ப துன்ப இன்ப காரியாதிகளும், தாய் பிள்ளே சகோதர உறவு சம்பந்த அநுப வங்கள் எல்லாம் ஆங்கிலத்தோடு கூடி வளர்ந்துபோகிறதே! ஒரு வேளே சிலர் “இது எங்கள் குற்றமா? துரைத்தன கல்வி, மேன்மை, பிழைப்புக்குறிய சலாக் கியங்கள் ஆங்கில சம்பந்தமா யிருக்கி

றதே, இது புறதேச அரசாட்சிக்காரர் செய்துவிட்ட வேலையல்லவோ?'' என்க லாம். இப்படி கைவிரித்து முறையிட்டு சும்மா விருத்தல் கிறிஸ்தவர்களுக்குத் தகுமா? ஆதியிலே அப்போஸ்தலர் பூமியை தலைகீழாகத் திருப்பினார்களே! ரோமை அதிகாரிகள் கூட அவர்களை அடக்கக் கூடாமல் போயிற்றே. வல் லமை அவ்வளவு அவர்கள் ஜீவியத்தில் காணப்பட்டதே. பூலோக துரைத் தனத்தின் தாறுமாறுகளை நாம் மாற் றப் போகிறோமா? அல்லது அவை நம்மை மாற்றி விடப் போகிறதா? அல்லது நாமும் நம் சுயதேச மானி டத்திரளும் பூலோகத்திற்கு ஆசீர் வாதமாயிருக்க வேண்டுமென்று கட வுள் நியமித்திருக்கிற நோக்கத்திற்கு தடையாயிருக்கும் பலவற்றையும் மாற்ற அவர் வல்லமையால் பிரயாசிப்போமா? நாம் தாய் பாஷையில் ஞான வசனிப் போடும், கவியோடும், பின்னும் ஆண்ட வர் அருளும் பல எத்தனங்களோடும்

மனுஷ ஜாதிகளுக்குள் முன் செல்லும் போது தானே அந்த சாக்ஷி பலமாய் விளங்கும். இல்லாவிடில் நம் சுதந்த ரத்தை இழந்து விடுவோம்.

நாம் வெளிச்சமடையும்படி நம் பெரு மான் பூமிக்கு தரித்திர கோலமாக வந்து சிலுவையில் உயிர் கொடுத்தார். நம் ஜனங்கள் வெளிச்சமடையும்படி நாம் நம் மையும் நம்முடையவைகளையும் தத்தம் செய்யவேண்டும். தனவான்களே! உங் கள் ஆஸ்தியை இதற்காகச் செலவு செய் யுங்கள். பெற்றோரே! உங்கள் பிள்ளை களை இந்த வேலைக்காக ஒப்புக்கொடுங் கள். வாலிப சகோதரரே, சகோதரி களே, சுயமேன்மையையும் உலக கீர்த்தி யையும் தேக சவுக்கியத்தையும் பிரதான மாகக் கருதாமல், உங்கள் ஏழை நாட்டா ருக்காகத் தரித்திரத்தையும் கஷ்டத்தை யும் அனுபவித்து உங்கள் தரித்திரத்தி னால் அவர்கள் மேன்மை அடையுமாறு பிரயத்தனஞ் செய்வது உங்கள் மேல்

விழுந்த பெருங்கடமை. உங்களது கஷ்டத்திலும் சுயவெறுப்பினுலும் அவர்கள் வெளிச்சமடையட்டும். கிறிஸ்து பகவானும் அப்படிச் செய்தாரே. நீங்கள் கிராமத்திலேயும் காடுகளிலேயும் உழைத்துக் கஷ்டம் அனுபவித்தும் உலகத்தில் உங்கள் பேர் பெரிதாக விளங்காவிட்டாலும் பரலோகத்தில் உங்கள் பேர் எழுதப்பட்டிருப்பதை மறக்க வேண்டாம். இரகசியத்தில் பார்க்கிற உங்கள் பிதாவின் பலன் உங்களுக்கு கிடைக்கும். எந்தெந்த கிராமம், நாட்டுப்புரங்களுக்கு கடவுள் உங்களை அழைக்கிருரோ, முகங்கோணுமல் அங்கிருந்து, இருவராய், அல்லது சிறு சிறு ஐக்கியக் கூட்டமாய்ச் சேர்ந்து, உங்கள் நாடோடிய சவரக்ஷணைக்காக பரம பிதாவின்பேரில் விசுவாசம் கொண்டு, உங்கள் ஏழை ஜனத்திரள் வெளிச்சமடைய, தெய்வ புத்திர பாக்கிய சிலாக்கியமடைய, எவ்வித மனுஷீக பாக்கிய சிலாக்கியங்களிலும் முன்னேற, நீங்கள் சேவகம் செய்யுங்கள்.

இவ்வாறு உங்கள் ஜீவனை "இழப்பதினால்" மெய்யாகவே அதை ஆதாயம் பண்ணிக் கொள்வீர்கள். ஜனங்களுக்காக நீங்கள் அங்கலாய்க்கும் பரிதாபமும், அவர்கள் தரித்திரம், அறிவீனத்தினிமித்தம் நீங்கள் சொரிகிற கண்ணீரும், அவர்களுக்காக நீங்கள் மன்றாடும் ஜெபதபங்களும், உங்களைக் கிறிஸ்துவுக்குள் ஆன்ம ஐசுவரிய சம்பன்னராக்கும். கிறிஸ்துவின் சாயல் உங்கள் முகத்தில் பிரகாசித்து, உங்களிலிருந்து அவர்கள் மேலும் வீசும்.

உங்கள் அனலும் ஆவியும் நீங்கள் அன்புகொண்டு யாருக்காக உழைக்கிறீர்களோ, அவர்களையும் பற்றும். உங்களிடமிருந்து ஜீவ நதி புறப்படும். "ஒரு நதி உண்டு. அந்த நதியின் நீர்க்கால்கள் கடவுளின் நகரத்தைச் சந்தோஷிப்பிக்கும்." அந்த நதி உங்கள் ஜீவனே. அந்த நகரம் கடவுளுடைய ஜனங்களாகிய இம்மானிடரே.

(3) சத்துரு நேசம்—மன்னிப்பு :

"நிந்தனை செய் திருப்பாணி நிரையழுத்திக்
கொலை புரியும்
வெந்தொழிலர் செய்வினையின் விளைவறியார்
பொறுத்தருளும்
எந்தையென வெழிற்கனிவா யிதழவிழும்
பெருமானைச்
செந்தனிக்கோற் கொளுந்தேவைச் சிலுவை
மிசைக் கண்டேனே."

தம்மை நிந்தித்து இரும்பு ஆணியை அடித்துக் கொலை செய்கிற பாதகர்க்காக "பிதாவே, இவர்கட்கு மன்னியும், இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" என்று திருவுளம்பற்றின தெய்வத்தைச் சிலுவைமேற் கண்டேன் என்று கிருஷ்ணபிள்ளை பாடுகிறார். கிறிஸ்துவின் பேரைத் தரித்திருக்கும் நாம், இந்த மன்னிப்பின் சுபாவகுணமுள்ளவர்களாயிருந்தால் நம் தேசத்தாருக்கு ஒரு விஷயத்தில் பெரிய சாக்ஷியாயிருப்போம். நம் தேசத்தைக் கெடுக்கிற ஒரு பெரிய

பாவம் ஐக்கியமின்மை. ஒருவர்மேல் ஒருவருக்குப் பகை, சந்தேகம். சில நாட்களுக்கு முன் வட இந்தியாவிலுள்ள ஓர் இந்திய கிறிஸ்தவகுரு என்னைப்பார்த்து: "டாக்டர், இந்த மகம்மதியரை நம்பலாமா?" என்று கேட்டார். நம் கிறிஸ்தவ தலைவரிடம், அல்லது தங்களை வேறு கக்ஷியாகப் பிரித்துக்கொண்ட இந்திய கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தினரிடம் (Indian Christian Association), "ஏன் இப்படி உங்களை உங்கள் சுய நாட்டாரிடமிருந்து பிரித்துக்கொள்ளுகிறீர்கள்" என்று கேட்டால் "இந்துக்களை நாம் நம்பித் துரைத்தன காரியங்களை விட்டுவிடலாமா?" என்று சொல்லுவார்கள். இது தவிர நம்மில் ஜாதி விரோதமுமிருக்கிறது. ஒரு காரியத்தை முழுவதும் மறந்துவிட்டோம். இந்த தேசத்திலுள்ள இந்த முப்பத்துமூக்கோடி ஜனங்களும் பேர்க்கிறிஸ்தவர்களாகி விடுவார்களென்று எண்ணுவது மூடத்தனம். அப்படி உலகமெல்லாம் பேர்க்கிறிஸ்தவளாக

நிரம்பி விட்டாலும் கிறிஸ்துவின் தேவ இராஜ்ஜியத்திற்கு அது என்ன பிரயோஜனம்? அவமானமே நேரிடும். இப்படியிருக்க, ரோமான் சபையாரும் சீர்திருத்த சபையாரும் சேர்ந்து உத்தேசம் 50 லக்ஷம் பேர்மாத்திரம் இருக்கிற நாம் 2550 லக்ஷம் இந்துக்களோடும், 700 லக்ஷம் மகம்மதியரோடும் சாசுவதமாக வாழவேண்டுமென்பது திண்ணம். நம்மை வேறாகப் பாவித்து, சுயசலாக்கியங்களை நாடி, மூன்றும் கக்ஷிக்காரராகிய ஆங்கில துரைத்தனத்தைச்சார்ந்து அவர்கள்கக்ஷியைச் சேர்ந்து நடப்பது மோசமாய் முடியும். அப்படி நம்மை இந்து மகம்மதியர் பகைப்பார் என்று பயந்து அவர்களுக்கு விரோத கக்ஷியாக நடந்தால் சிலுவையின் தொண்டராய் எப்படி விளங்குவோம்? பகைவரை நேசித்து, அவர்களை மன்னித்து, தீமைக்குப்பதிலாக, நன்மைசெய்வதல்லவோ சிலுவையின் கருத்து? நாம் இப்படி சுயவெறுப்புள்ள அன்பர்களாகக் காணப்பட்டால் நம்மைப்பகைக்கிறவர்கள்

கூட நமக்கு மரியாதை செய்ய ஆரம்பிப்பார்கள். அதுவுமல்லாமல், அவர்களுக்குள்ள பிரிவினை மத்தியிலே நம் சாந்த குணத்தினாலும், பொறுமையினாலும், சமாதானம் செய்கிறவர்களாக விளங்குவோம். "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் கடவுளின் புத்திரர் என்னப்படுவார்கள்." மனுஷரை இணைத்து, ஐக்கியப்படுத்துகிற இப்படிப்பட்ட வேலை பெரிதா? சுய சிலாக்கியத்தை நாடி சுய நயமாய் நடந்து கொள்பவர்களாக நம்தேசத்தார்க்கு முன் விளங்குவது பெரிதா? மேலும் இந்துக்கள் கிறிஸ்தவர்களை இம்சைசெய்து அவர்களைக் கீழாக்கிப்போடுவார்கள் என்று சொல்வது நியாயமல்ல. திருவாங்கூரிலிருக்கும் சீரிய கிறிஸ்தவர்கள் சுமார் 18 நூற்றாண்டுகளாக இந்து துரைத்தனத்தின்கீழ் சந்தோஷமாய் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களை முதலாவது துன்பப்படுத்தினது மேற்குதேச ஐரோப்பியராகிய போர்த்துகீஸ் ரோமான் சபை

யாரே. இதினுல் நாம் கொள்கிற சந்தேகம் நம் தேச சரித்திரத்துடன் ஒவ்வவில்லை. மனுஷனை மனுஷனேடு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்கப்பட்ட இருவரையும் கடவுளோடு ஐக்கியப்படுத்தல் சிறுவையின் சாக்ஷிகளின் வேலை.

எருசலேலம் நகரத்திற்கு சுமார் 10 கல்லுக்கப்பால் ராமல்லா என்னும் ஓர் ஊர் இருக்கிறது. நான் போன வருடம் ஏப்ரில் மாதம் ஒரு நாள் அங்கு ஓர் கிறிஸ்தவப் பள்ளிக்கூடத்தில் தங்கியிருந்தேன். அமெரிக்காவிலிருந்து அவ்விடம் வேலை செய்யும் "சிநேகிதரின் சங்கம்" அல்லது "குவேக்கர் சங்கம்" என்னும் கிறிஸ்தவ சுவிசேஷ பிரபல்ய சங்கத்தார் உயர்தர பள்ளிக்கூடம் அது. அவ்விடத்தில் ஓர் வாலிபனிடத்தில், "நீ மகம்மதியனு, கிறிஸ்தவனு" என்று விசாரித்தேன். உடனே அவன் முகம் வேறுபட்டு, உரத்த சத்தமாய் "நாங்கள் சகோதரர், ஐயா," என்முன். பிற்பாடு

அப்பள்ளிக்கூடத் தலைமை அமெரிக்கன் உபாத்தியாயரிடம் ஏன் இப்படி அப் பையன் உத்தரவு சொன்னான் என்று விசாரித்தபோது, இங்கு நாங்கள் ஒரு பெருமைத்தனமாக பையன்களுக்குள் பிரிவினை, அன்புத்தாழ்ச்சியை யுண்டாக்கும் மார்க்கபேத போதனையை சிரேஷ்டமாகமுன் வைத்து அவர்களுக்கு படித்துக்கொடாமல் கிறிஸ்துவின் ஆவியாகிய சகோதர ஐக்கிய அன்பையே பிரதானமாகக் கற்றுக்கொடுக்கிறோம் என்று மறுமொழி கூறினார்.

(4) பாவம் சுமரல்: திவ்விய குணாதிசயங்களையுடைய சச்சிதானந்த கடவுள் (அதாவது சத்-அழிவில்லாமை, சித்-மறை பொருள், -ஆனந்தம்-சந்தோஷம்) ஏன் அபாத்திரரும் துரோகிகளுமான பாவிகளாகிய நம் பாவத்தைத் தம்மேல் சுமக்க அக்கரை கொண்டார்? நம் மேல் அவர் கொண்ட அன்பு அவரை நெருக்கி ஏவினதினாலேதானே நம்

பாவத்தை தம் தலைமேல் ஏற்றிக் கொண்டு, நம் அவமானத்தை தனதாகப் பாவித்து, நமது துக்க மன வேதனையை தனதாக்கிச் சிலுவையின் நிந்தையையும் இகழாமல் இப்படி உயிர் விட்டார். நமது தேசத்தாரின் பழக்க வழக்கங்களில், வருண விஷயங்களில், ஜீவியத்தில் காண் கிற குற்றங்குறைகளை, பாவங்களை, நம் முடைய அவமானமாகப் பாவித்துச், சகித்து, அங்கலாய்த்துப், பரிதபிக்கி றோமா? பெற்றதாய் தன் பிள்ளையின் குறைகளைப்பற்றியும் பாவங்களைப்பற்றி யும் எப்படி அயலகத்தாரிடம் முறையிட வாய் கூசுவாளோ, அவ்வாறே நம் ஜனங் களின் பாவங்கள், குறைகளைக்குறித்து பிரசுரிக்க ஆசியாமல், அன்போடும் ஊக் கத்தோடும், அவர்கள் குறைவுகளை நிறைவாக்க, அவர்கள் பாவம்போக்க நாம் அவர்களுக்குள் வேலை செய்கி றோமா? ஐயோ! எத்தனை இந்திய கிறிஸ்தவர்கள் தங்கள் தேசத்தின் பாவங்களை அயல் நாட்டாருக்கு விளம்ப

ரம் செய்ய, அவைகளைக்குறித்து இதர நாட்டார் வாசிக்கும்படி புஸ்தகங்கள் எழுதத்தீவிரிக்கிறார்கள்! மெய் அன்பு இப்படிச் செய்யுமா? அன்பு சகல பாவத்தையும் மூடுமே!

(5) துறவறம்: சிலுவையில் தெய்வ துறவறம் பார்க்கிறோம். நித்திய கடவுளின் ஏக வஸ்துவாகிய ஏசுகிறிஸ்து நாதர் ஏழை அடிமையின் ரூபம் தரித்தது மாத்திரம் அல்ல. சிலுவையில் மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமானமாயிருப்பதை இறுக்கிப் பிடித்துக்கொள்ளத்தக்க பொருளாக (Moffat's translation) எண்ணாமல், தம்மை வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்."

" அந்தா தந்தமி முழுங்கவமா லெலாந்
தொழுதேத்தத்
தந்தை திருமுன மகிமைத் தவிசிருந்த தற்
பரனை
நந்தம் வினை தொலைத்திடற்காய் நரனாகி
நலிந்திரத்தம்
சிந்தியுயிர வஸ்தையுறகச் சிலுவை மிசைக்
கண்டேனே "

என்று மேற்சொல்லிய வேத வசனத்தின் கருத்தை கவியாக கிருஷ்ண பிள்ளை பாடுகிறார். துறவு என்றால் விட்டுவிடுதல், பற்றுவிடுதல், நீக்குதல் என்று அர்த்தம். நம்முடைய ஜீவியத்தின் மெய்யான நோக்கம் நிறைவேற, நாம் கிறிஸ்துவின் பூரண ஜீவனையடையத் தடை செய்பவைகளை முற்றிலும் நீக்கிவிடுதல் வேண்டும், இதில் விடுதல் மாத்திரமல்ல பிடித்தலுமிருக்கிறது. உதவாததைத் தள்ளி லாபமானதைக் கையாடிப் பிடித்துக் கொள்ளுகிறோம். அழிந்து போகிறதைப் புறக்கணித்து அழியாமையைச் சேகரித்துக்கொள்ளுகிறோம். பூலோகத்

தின் பொக்கிஷங்களை விட்டுவிட்டு, பரலோகத்தின் பொக்கிஷங்களைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறோம். "எனக்கு லாபமானவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறியும் அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு . . . அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலி: 3:7, 8, 11).

நம்முடைய தேசத்தின் சரித்திரத்தை கவனித்தால், அதின் மேன்மை, வியாபாரம், யந்திர அபிவிர்த்தி, லௌகீக சாஸ்திர தேர்ச்சி, புறதேசம் சென்று அந்நிய ஜாதியாரை யுத்தத்தில் தோல்வியடித்தல், புறநாட்டுகளை ஆதினம்செய்து சக்கிரவர்த்தித்தனம் செலுத்

தல் முதலியவற்றிலல்ல. இதர நாட்டுப் பெரியோர் பெருமை இவ்வண்ணமான மேன்மையே. அலெக்சாந்தர், ஜூலியஸ் சீஸர், நெப்போலியன் போனபார்ட்டு, நெல்சன், கிளேவ், மற்றும் ஆங்கிலயுத்தத் தலைவர்சேனாதிபதிகள், துரைத்தனஅதிகாரிகள் பலர் இதற்கு உதாரணம். நம் தேசத்தவரும் இப்படி மேன்மை அடையவேண்டுமானால் முடியாதென்று நான் நினைக்கவில்லை. ஆனால் இந்தியாவில் நம்மை இணைத்து அனலூட்டி, முன்னேறச் செய்பத்தக்க ஞானிகள் புத்திமான்களுக்கு எப்போதும் இப்பூலோக சிற்றின்பமும் லௌகிக மேன்மையும் மாயையும் அநித்தியமுமென்ற உணர்வு பலமாயிருந்ததால், வைதீகமுறைகளைத் தழுவி தெய்வீக விஷயங்களுக்குத் தங்களை தத்தம் செய்து விட்டார்கள். இதற்கு கௌதம புத்தர், சங்கராச்சாரியார், மாணிக்கவாசகர், காந்தி மகாத்மா முதலிய பல பெரியோர்களை உதாரணம் கூறலாம். மகாத்மாகாந்தியைக் கவனியுங்கள்:

இவர் அந்நிய துரைத்தனம் ஆகாதென்று பகிரங்கமாக, தைரியத்தோடு பிரசங்கித்தாலும், அந்நிய துரைத்தனத்தைப் பலவந்தமாய் ஒழிக்கக்கூடிய மனுஷரை அழிக்கும் பீரங்கிகள், யுத்தக்கருவிகள் முதலியவற்றை உபயோகிப்பது பாவம், சத்துருக்களை நேசித்து, அன்பாகிய அகிம்சாவினாலே சத்தியத்தை பாது காக்க வேண்டுமென்று போதகம் செய்கிறார். தன் நாடோடிய தனி பொதுஜன ஜீவியங்களிலும், அவர் ஆச்சிரமத்தில் வைதீக, பரிசுத்த ஜீவியாக விளங்குகிறார். இவர் மேற்கத்தி தேசங்களில் பிறந்திருப்பாராகில் ஜனங்களை வலி இணைத்து யுத்தாயுதங்களை அணிந்து போர்புரிந்து அன்னியாது துரைத்தனத்தை யொழிக்க பிரயாசிப்பார். ஆனால் இந்தியாவின் பூர்வீக ரிஷிகளின் ஆவி இவரைப்பிடித்திருப்பதால் இப்படி வைதீக ஒழுங்குகளுக்கே பூலோக இராஜ்ஜியங்களை வசப்படுத்த விடாப்பிடியாய் நம் பிக்கையோடு முயற்ச்சிக்கிறார். துறவறம்

பூண்டு தரித்திரகோலமுமாய்த் தன்னை வெறுத்து ஜீவிக்கிறார்

இப்படிப்பட்ட இந்த தேசத்தில் பிறந்த என் உடன் கிறிஸ்தவர்களே, இப்பேர்ப்பட்ட ஆவியும் அனலுமுள்ள பூர்வீக மகாத்மாக்கள் வைதீக பக்தரின் சந்ததியாரே, இதற்கு மேலாக கிறிஸ்து பகவானின் திவ்விய அவதாரம், தன்னை வெறுத்த அன்பின் ஜீவியம், சிலுவைக் காக்ஷி அனுபவங்கள் அடைந்தவர்களே, உங்கள் காரியம் எப்படி? இவ்வளவு பெரிய சலாக்கியங்கள், புத்திர பாக்கிய யோக்கியதைகளடைந்த உங்களிடத்தில் கர்த்தர் அதிகம் எதிர்பார்க்கமாட்டாரா? "எவனுக்கு அதிகமாகக்கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவனிடத்தில் அதிகம் எதிர்பார்க்கப்படும்." உங்கள் சலாக்கியம் எவ்வளவு அதிகமோ, அவ்வளவு அதிகம் உங்கள் பொறுப்பும்.

"சிலுவையில் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து,

மனுஷர் சாயலானார்..... சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகித் தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆத லால் கடவுள் எல்லாவற்றிற்கு மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தி னாலே வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவ னுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தரு ளினார்." நம் பெருமானின் துறவறத் திலே பற்று (விட்டு) விடுதல் மாத்திர மல்ல, பற்றி (பிடித்து)க் கொள்ளுதலு மிருந்தது. தெய்வீக பரலோக மேன் மையைத் துறந்து, தரித்திர மானிட வேஷம் பூண்டு சிலுவையில் மரித்தவர், வானோர், பூதலத்தோர், பூமியின் கீழா னோர் (பரலோக, பூலோக, பாதாள மூவுலகத்தோரும்)முழங்காலூன்ற தெய் வீகராஜ்ஜிய பாரம் செய்து முடிவில்லாத

முழுமைக்கு செங்கோல் செலுத்தும் ராஜாதி ராஜனுகி விட்டார். "மரித்தேன், இப்போது சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ராஜாதி ராஜர், கர்த்தாதி கர்த்தர்." "அவருடைய ராஜ்ஜியத்திற்கு முடிவில்லை."

உங்களையும் அவர் பற்றுவிட மாத்திரம் சொல்லுகிறதில்லை. அவரைப் போல் அன்பினுல் ஏவப்பட்டு உங்கள் தனத்தையும், பணத்தையும், கல்வியையும், சுகத்தையும் பூலோக மேன்மையையும் பாராமல் சகலத்தையும் துறந்து, உங்களைச்சுற்றிலும் இருக்கிற ஏழை ஜனத்திரளுக்காக, அவர்கள் மேன்மையும் பாக்கியமுமடைய, அறிவீனம் போய், முன்னேறிச்செல்ல, உங்களைக் கர்த்தருக்கு தத்தம் செய்வீர்களாகில், நீங்களும் உங்கள் ஆண்டவர்போல் மேலானதைப்பற்றிக் கொள்ளுவீர்கள். உங்கள் ஜீவியத்தின் வல்லமையும் பாரம்பரியமாய் நிலைத்துச்செல்லும். ஆத்ம

பிரகாரம் புத்திர பௌத்திர செல்வாக் கடைவீர்கள். பின்வருவோர் உங்களுக் காக கர்த்தரைத்துதித்து உங்கள் நாமத் தின்மேல் ஆசீர்வாதம் கூறுவார்கள். மனுஷ குமாரன் தம்முடை ராஜ்ஜியத்தின் மகிமையோடு வரும்போது, உங்களை ஆர வாரிப்பு, களிப்புடன் ஏற்றுக்கொள் ளும் உங்கள் ஆவிக்குரிய மக்களாகிய பக்தர்திரள் உங்களைச் சந்திப்பார்கள். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மாளும்போது, உங்களை நித்திய மான வீடுகளிலே ஏற்றுக்கொள்வா ருண் டாகும்படி, அநீதியான உலகப்பொரு ளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம் பாதியுங்கள்." (லூக்கா. 16 : 9). "என் னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்த மாகவும், வீட்டையாவது, சகோதரியை யாவது, சகோதரிகளையாவது, தகப்பனை யாவது, தாயையாவது, மனைவியாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம் மையிலே துன்பங்களோடேகூட நூறத்

தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.'' (மாற்கு. 10 : 29,30).

(6) கடைசியாக சிலுவையில் மரணத்தை மேற்கொண்ட ஜெயம் விளங்குகிறது. ''மரணத்திற்குள்ளானேன், ஆயினும், இதோ யுகாயுகங்களும் ஜீவித்திருக்கிறேன்.''

''ஆகவே நீங்கள் கிறிஸ்துவோடு எழுப்பபட்டதுண்டானால் கிறிஸ்து கடவுளின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளை யல்ல மேலானவைகளிலேயே கருத்தாயிருங்கள். நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்திருக்கிறதே. நமது ஜீவனாகிய கிறிஸ்து

வெளிப்படும்போது நீங்களும் அவரோடு மகிமையில் வெளிப்படுவீர்கள்.!'

நாம ஞானஸ்நானம் பெறும்போது சிலுவையின் அடையாளம் நம்மில் சிலர் நெற்றிமேல் வரையப்படுகிறது. விவாக சமயத்தில் பெண் கழுத்தில் சிலுவையின் அடையாளமுள்ள தாலி கட்டப்படுகிறது. இப்படி பலவிதமாக நம் ஜீவியத்தின் முக்கிய சம்பவங்களில் சிலுவைக்குறியை விசேஷமாக பாராட்டிக்கொள்ளுகிறோம். ஆனால் நம் நாடோடிய ஜீவியத்தில் லௌகீக சிந்தை மேலிருக்கிறதா? சுவர்க்கலோக சிந்தையினால் கவரப்பட்டு பரம வாசிகளாக ஜீவிக்கிறோமா? நித்தியஜீவனின் சுதந்தரவாளிகளாக நம் சுய தேசத்தாருக்குமுன் (பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்து) மரணத்தை வென்ற நித்திய ஜீவியாகிய கிறிஸ்து இயேசுவின் பக்தர்களாக விளங்குகிறோமா? " நமது ஜனசமூக சிலாக்கியம் பரலோகத்துக்குரியது. அங்கேயிருந்து ஆண்டவரா

யிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் ரக்ஷகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்." இப்பூலோக ஜனசமூக சிலாக்கிய வாஞ்சையல்லோ இப்போ நம் தேசத்திலுள்ள கிறிஸ்தவர்களின் மனதைக்கவர்ந்து ஆண்டுகொண்டிருக்கிறது. இதினால் நம் சாக்ஷியும் அபத்தமாயிருக்கிறதே. மனம் நொறுங்குண்டு, மரண பயத்தினாலும், மரித்தோரின் உயிர்த்தெழுதலின் சத்தியத்தை அறியாமையினாலும் வருந்துகிற நம் ஜனத்திற்கு முன் நமது ஜீவியத்தினால் மெய் சாக்ஷி பகர பிரயாசிப்போம்.

## சிலுவையின் உத்தம சாக்ஷிகள்.

(1) கீழ் நாடாகிய பலஸ்தீன நாட்டில் எம்பிரான் சிலுவையில் தொங்கிய சமயத்தில் மத்தியான வேளையில் கிறிஸ்துவின் பக்கத்தில் தொங்கிய ஓர் கள்ளனும் இந்தச் சிலுவைக் காக்ஷியைப் பார்த்துக்கொண்டிருந்தான். சிலுவையின்மேல் தொங்கினவருடைய களங்கமின்மையையும், பரிசுத்தத்தையும், அன்பையும், தம்மை இம்சைப்படுத்தி, இகழ்ந்து, வதைத்துக் கொலை செய்பவர் போல் எள்ளளவும் கோபங்கொள்ளாமல், பரிதபித்து, அவர்களுக்காக அவர் ஜெபிக்கிறதையும், பார்த்தான். பார்க்கப் பார்க்க, அவன் உள்ளம் உருகிற்று. இக்காட்சி அவனுக்குத் தன்னுடைய கடந்துபோன பாவ ஜீவியத்தையும் பகிரங்கமாகக் கண்ணுக்கு முன் கொண்டு வந்தது. "நான் நியாயப்படி தண்டிக்கப் படுகிறேன், நான் நடப்பித்தவைகளுக்கு

தக்க பலனை அடைந்தேன். இவரோ தகாத தொன்றையும் நடப்பிக்கவில்லையே'' என்று அவன் மனம் கொதித்தது. இவ்வேளையில் ஒரு புதிய நம்பிக்கை அவனுக்கு வந்தது. சிலுவையில் தொங்கின அவரே தன் ஆண்டவனென்று கண்டு பிடித்தான். பூலோக ரோம ராஜ்ஜியத்தின் விதிப்படி அவன் சிலுவையின் தண்டனைக்குட் பட்டாலும் பரலோக ராஜ்ஜியத்திலிருந்து தன் பெருமானாகிய ஏசு தன்னைத் தள்ளிவிட மாட்டார் என்ற சந்தோஷ உணர்வு அவன் உள்ளத்தில் சுரந்தது. பூலோகத்தாரால் புறக்கணிக்கப் பட்ட சிலுவையில் தொங்குகிற அவரே பரமபிதாவால் நியமிக்கப்பட்ட கர்த்தாதி கர்த்தா, இராஜாதி ராஜா, என்று பிரத்தியக்ஷமாய் கண்டு கொண்டான். "ஆண்டவரே, நீர் உமது இராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்,'' என்று விண்ணப்பம் செய்தான். உடனே "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீ

சிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' என்ற கிருபை வாசகம் நம்பெருமானால் அவனுக்கு உரைக்கப்பட்டது. இக் கள்ளனுடைய ஜீவியம் வீணாய்ப் போயிற்ரு?

---

## வேதநாயக சாஸ்திரியார்.

கிட்டத்தட்ட 2,000 வருஷங்களுக்குப் பின் திருநெல்வேலி தேவசகாயம் வயிற்றில் பிறந்த வேதநாயக சாஸ்திரி பக்தனாயிருந்தாலும் பாவத்தில் தவறி விழுந்து மனங்குலைந்து தவித்தபோது, இந்தக் கள்ளனின் அநுபவத்தின் ஞாபகம் அல்லவோ வீழ்ந்த அவரையும் கைதூக்கி இரக்ஷித்தது.

"கள்ளனாயினும் வெள்ளனாயினும் பிள்ளை
நான் உனக்கல்லவோ?
கர்த்தனே வலப்பக்கமேவிய கள்ளனுக்கருள்
செய்தையே;
தள்ளி என்னை விடாமல் உன்னடி தந்து
காத்தருள் அப்பனே,
தயவாய் ஒரு குருசியில் ஏறிய சருவ ஜீவ
தயாபரா."

## பிரான்சிஸ் மகாத்மா.

கி. பி. சுமார் 12 நூற்றாண்டுகளுக்குப் பின் இத்தாலியா தேசத்தின் ஓர் பட்டணத்தில் ஓர் பழைய இடிந்த கோவில் இருந்தது. அக்கோவிலில் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சொரூபம் ஒன்று இருந்தது. அங்கு ஓர் நாள் தனியாக ஓர் வாலிபன் இந்த சொரூபத்திற்கு முன் உட்கார்ந்திருந்தான். இவன் தகப்பன் ஓர் ஐசுவரியமுள்ள வியாபாரி. இவ்வாலிபன் மனதிலோ சமாதானமில்லை. இந்த நிலைமையில் அச்சொரூபத்தைப் பார்த்துக் கொண்டிருந்த இவன் பரவசமடைந்து சிலுவையில் மரித்த நாதன் மெய்யாக ஜீவனோடே அக்குருசிலிருந்தே தோன்றி இவனோடு பேசக் கேட்டான். அவருடைய அன்பு இவனை வல்லமையாய்ப் பிடித்தது. அவருக்கென்று எவ்வித சேவகமும் செய்ய அவருக்கென்று, மரிக்

கவும் கூட தன்னைத்தத்தம் செய்தான். இவன் தகப்பன் இவனை இம்சைப்படுத்தினான். இவன் ஊரார் இவனை பைத்தியகாரன் என்று பகடிசெய்தார்கள். ஆனால் இவனோ எல்லாவற்றையும் பொறுமையாய்ச் சகித்து தனக்குள்ள சம்பத்தை யெல்லாம் தானம்செய்து விட்டு அநேகர் மனந்திரும்பிப் பரிசுத்த ஜீவியம் செய்வதற்கும் தங்களுக்கென்று பிழையாமல் பிறருக்கென்று ஜீவிக்கத்தங்களை ஒப்புக் கொடுப்பதற்கும் கர்த்தருடைய கரத்தில் வல்லமையுள்ள கருவியாகி விட்டான். இந்த பரிசுத்தவானால் ஏற்படுத்தப்பட்ட ஓர் சங்கத்தார் இக்கால மட்டும் பற்பல தேசங்களில் வேலை செய்கிறார்கள். இவர் அசிஸி ஊர் பிரான்சிஸ்.

## ஸின்ஸிண்டார்ப் பிரபு.

மொரேவியன் சகோதரஐக்கியக் கூட்டத்தார் என்கிற ஐக்கிய சங்கத்தாரைப் பற்றி பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தச்சங்கத்தார் பலவிதமான துன்பங்களும் நேரிடக்கூடிய தேசங்களுக்கும் போய் சுவிசேஷத்தைப்பிரசங்கித்து வருகிறார்கள். இந்த சங்கத்தை ஸ்தாபித்தவர் ஓர் பெரியபிரபு. தெய்வஅன்பில்லாதவராயிருந்தார். ஆனால் ஓர் நாள் தன் ஊரிலிருக்கும் ஓர் விசித்திர படசாலைக்கு போயிருந்தார். அங்கே பற்பல படங்கள் வைக்கப்பட்டிருந்தன, தீடீரென்று ஒரு படத்தைக் கண்டு அதின் மேல் அவர் கவனம் பலமாய்ச்சென்றது. அது சிலுவையின் அறையப்பட்ட ஏசுவின் படம். அந்த படத்தின்கீழ் "இவை எல்லாவற்றையும் உனக்காகச் சகித்தேன், நீ எனக்காக என்ன செய்திருக்கிறாய்"? என்ற வாசகம் எழுதியிருந்தது. இதை

பார்க்கப், பார்க்க, அவர் உள்ளம் உருகிற்று. அதே வேளையிலே தன்னை கிறிஸ்துவுக்கென்று தத்தம் செய்தார்.

## நீலகண்டன் சுப்பையர் தேவதாசன்.

தமிழ் நாட்டிலே இந்தச் சிலுவை நாதனின் அன்பை ருசித்த ஓர் பிராமண வாலிபன் இருந்தார். கிறிஸ்துவின் ஆவி இவரைப் பிடிக்கவும் இவர் கஷ்டத்தையும் பாராமல், பட்டிகள், கிராமங்கள் எல்லாம் சுற்றித் திரிந்து, ஏழை ஜனங்கள் கொடுத்த கூழ் முதலியவற்றைக் குடித்துக் கொண்டு, கிறிஸ்துவின் அன்பைக் குறித்து சாக்ஷி பகர்ந்து வந்தார். கிராமத்தில் வண்டியில் பிரயாணம் பண்ணுகிறவர் பின்னால் ஓடி அன்போடே அவர்களுக்கு தன் பெருமானைக் குறித்துச் சொல்லுவார். கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கும் ஸ்திரீகளிடம் கிறிஸ்துவின் அருமையை புகட்டுவார். தன்சொக்காயில் எதிரிலும் பின்னேயும் "ஏசுவை நம்பு" என்கிற வாசகத்தைத் தரித்திருப்பார். இவர்தான் கிறிஸ்துவுக்கென்று வல்லமையோடுஉழைத்து, நாகர்கோவில் சபைக்கு குருவாயிருந்த, நீல

கண்டன் சுப்பையர் தேவதாசன் போதகர். இந்த நீதிமானால் திருநெல்வேலி கிறிஸ்தவர்களுக்கு முண்டான ஆவிக்குரிய நன்மை கொஞ்சமல்ல.

---

# வீரசூரியா.

"சிலுவையே என் இருதயத்தை கவர்கிறது."
(வீரசூரியா)

இலங்கைத்தீவில் கால் என்ற பட்டணத்திற்கு சமீபமாயுள்ள தோதாண்டுவா கிராமத்தில் புத்த மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவரான குடும்பத்தில் பிறந்த வீரசூரியா என்னும் ஒருவரிருந்தார். இவர் சிறுபிராயத்தில் கண்டியிலுள்ள திரித்துவர் கலாசாலையில் படித்துக்கொண்டிருக்கும்போது ஒரு ஓய்வு நாள் காலையில் ஜெப ஆலயத்தில் தெய்வ ஆராதனை சமயத்தில் கிறிஸ்து இயேசுவினாலுண்டாகும் பாவ மன்னிப்பின் அனுபவமடைந்து ஆனந்தித்தார். கடவுளின் சமாதானம் அவர் மனதை நிரப்பிற்று. அவருக்கு அப்போ இருபத்தி நான்கு வயது. இருதய நிறைவினால் மற்றும் மாணவர்கள் முன்பாக அவர் சாக்ஷி கொடுக்க அவர்களில்

அநேகர் மறு பிறப்படைந்து தெய்வ சந்தோஷ சமாதான மடைந்தார்கள். "இயேசு" என்ற பதத்தை பெரிய அச்சரமாக துண்டுக் காகிதங்களிலெழுதி தன் உதடுகளின் மேல் அவைகளை அணைத்து முத்தி செய்வாராம். "என்னை விட இயேசுவை சிநேகிக்கிறவர்களுண்டானால் அவர்கள் பாதம் நான் தேடி உட்கார்ந்து படிப்பேன், என்ன வந்தாலும் சரி", என்று தனக்குள்ளே சொல்லிக் கொள்வார். ஓர் நாள் இரக்ஷணிய சேனை உத்தியோகஸ்தரான ஓர் ஆங்கில பிரசங்கி அந்த ஊரில் கூட்டம் நடத்தினார். இவரைப் பார்த்தபோது ஆங்கிலராயினும் இவர் தம் சுய உடையாகிய ஐரோப்பிய வஸ்திரங்களை கிறிஸ்துவின் அன்பினாலேவப்பட்டு, களைந்து விட்டிருக்க, சுதேசியாகிய நானோ, என்சுயஉடையைத் துறந்து ஐரோப்பிய வஸ்திரம் அணிந்து கொண்டிருக்கிறேனே, நானெப்படி இவரைப் பார்க்கிலும் கிறிஸ்துவை சிநேகிக்கிறேன் என்று சொல்லமுடியும் என்று

வருந்தினர். தன்னூருக்குப் போய் தான் இரக்ஷணிய சேனையைச் சேர தீர் மானித்து விட்டதை தன் பெற்றோருக் குத் தெரியப்படுத்த, அவர்கள் இவரைத் தடை செய்தார்கள். இரண்டு வாரம் ஜெபத்தில் தரித்திருந்தார். பெற்றோர் கள் கடைசியில் வருத்தத் தோடு சம்ம தித்தார்கள். அப்போஸ்தலரைப் போல ஜீவித்துழைக்க வேண்டு மென்னும் வாஞ் சையினால் இப்படி இரக்ஷணிய சேனை யைச் சேர்ந்தார். தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் வேலை செய்யும் போது, சிங்களவராயிருந்தும், தன்னை தமிழ ரோடு சகோதர அன்பு காட்டி ஒன்றாக் கும்படி தலைச்சவரம்செய்து குடுமி வைத் துக்கொண்டார். பார்வைக்கு உயர்ந்த மேனியும், சௌந்திரிய தோற்றமும் உடையவராம். சாதாரணமாக நம் தேசத்தாரை, மேல்நாட்டார், ஐரோப்பி யருக்கு மேலாக உயர்ந்த உத்தியோகத் தில் வைக்க மாட்டார்கள். ஆனால் இவரையோ ஐரோப்பியரையும் மேல்

பார்க்கும் உயர்தர கர்னல் ஆக ஏற் படுத்தினார்கள். இவரின்கீழ் 150 ஐரோப் பியரும் 150 இந்தியருமாக 300 உத்தி யோகஸ்தர் வேலை செய்தார்கள். அன் பினாலே அவர்களை யெல்லாம் மிகுந்த ஆச்சரியமாய் நடத்தி வந்தார். ஒரு தடவை இவர் கீழ்வேலை செய்த இரண்டு உத்தியோகஸ்தருக்குள் எவர் பெரியவ ரென்ற வழக்கு நேரிட்டது. எவர் சமா தானஞ் சொன்னாலும் அவர்கள் வழக் குத் தீரவில்லை. வீரசூரியா இதை அறி யவும், இருவரையும் தனியே அழைத்து, உட்காரவைத்து, தண்ணீர் கொண்டு வந்து அவர்கள் கால்களை கழுவ ஆரம்பித் தார். அவர்கள் வேண்டவே வேண்டா மென்று தடுத்த போது "உங்கள் கால் களை நான் கழுவாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் என்னோடு உங்களுக்கு பங்கில்லை", என்று அவர் சொல்ல அவர் கள் மனம் மெழுகுபோல் இளகிவிட்டது. கண்ணீரோடு அவர்கள் தங்கள் பாவத் தை உணர்ந்து, அவர்களிருவரில் பெரிய

உத்தியோகஸ்தர் சிறியவருடைய பாதங்களைத் தாமே கழுவினார். விவாதமும் வழக்கும் அதோடு ஒழிந்தது. அன்பே ஜெய வெற்றியடைந்தது.

இவர் மூலமாய் கண்டியில் கிறிஸ்தவ வாலிபர்மட்டுமல்ல புத்தவாலிபரும் மறு பிறப்படைந்து கடவுளிடம் மனம் திரும்பினபோது, புத்தருக்குள் துஷ்டராயிருந்த சிலர் இவரை விரோதித்து தொலைக்க வேண்டுமென்று சதி ஆலோசனை செய்தார்கள். இதையறிந்து, வீரசூரியா இத்துஷ்டரை தம்மோடு ஓர் தனித்த காடான இடத்திற்கு ஓர் கூட்டத்திற்கு வரும்படி அழைத்தார். கையிலே ஓர் கயிறும் கத்தியும் கூடஎடுத்துக்கொண்டு போனார். இவர் சிநேகிதர்களில் ஒருவர் இரண்டு பேர் மாத்திரம் கூடப் போனார்கள். பலர் அந்தக் கூட்டத்திற்கு வந்தார்கள். இவருக்குத் தீமை செய்ய எண்ணியே வந்தார்களென்பதற்கு சந்தேகமில்லை. கயிரை அவர்களிடம் கொடுத்து

தம்மை மரத்தோடு கட்டச் சொன்ஞர். கத்தியை அவர்களிடம் கொடுத்து, தங்கள் மனதின்படி என்ன செய்ய அவர்கள் விரும்பிஞர்களோ அதின்படி செய்யச் சொன்ஞர். போலிசார் தடை செய்யக் கூடாதபடி, காடான தனித்த இடத்தை தெரிந்திருந்தார். அந்த ஜனங்களின் மீட்பிற்காக தம் உயிரையும் தன் ஆண்டவர் போல் தியாகம் செய்ய இப்படி தம்மை ஒப்புக் கொடுத்தார். ஆஞல் இக்காட்சியைக் கண்ட அத்துஷ்டரோ, அவருக்கு ஏதும் சேதம் செய்ய மனங் கொள்ளவில்லை. அவர் அன்பும் மஞேதைரியமும் அவர்களை மேற் கொண்டது. இதன் பின் அவருக்கு தீமை செய்ய அவர்கள் பிரயாசப் படவில்லை.

இன்ஞெரு ஊரில் ஒரு நாள் சில முரடர்கள் இவரைக் கீழே தள்ளி, உதைத்து அடித்தார்கள். இவரோ அடிதத அவர்கள் கைகளை முத்தி செய்து, ரஸ்தாவில்

முழங்காலூன்றி கடவுள் அவர்களை மன்னித்து ரக்ஷிக்கும்படி வேண்டிக்கொண்டார். இவரை ஓர் பெரிய கூட்டவிஷயமாக இரக்ஷணிய சேனையார் இங்கிலாந்திற்கு அனுப்பியபோது கப்பலில் பிரயாணஞ் செய்த ஒரு நவாப் இவர் மேல் பிரியம்கொண்டு, இவர் பேசின சுவிசேஷ சங்கதிகளை தான் கவனமாய் கேட்டதுமன்றி, தன்னுடைய உத்தியோகஸ்தருக்கும் மொழிபெயர்த்துச் சொன்னாராம்.

ஆனால் 1888-ம் வருஷம் மே-மாதம் கர்த்தரின் அழைப்பு திடீரென்று இவருக்கு வந்தது. இன்னொரு இரக்ஷணிய சேனை உத்தியோகஸ்தருக்கு விஷபேதி கண்டது. வீரசூரியா பயமில்லாமல் மிக அன்போடு இவருக்கு பக்கத்திலிருந்து பாடு பார்த்தார். அவர் சுகமானார். ஆனால் விஷபேதி வீரசூரியாவுக்கு வந்தது. மகா மரணவேதனையா யிருக்கும்சமயத்தில் "இரக்ஷிப் படைந்திருப்பது எவ்வளவு நேர்த்தியா யிருக்கிறது!" என்று

முகமலர்வோடு சொன்னார். இரவின் அந்தகாரம் மூடி, நேரம் செல்ல, செல்ல சுற்றி அன்புடன் இவரைப் பார்த்து வந்தவரின் நம்பிக்கைகுன்றிற்று. ஆனால் இவர்மேல் அவர்களுக்கிருந்த அன்பினால் மனம்பொங்கி, தவித்து, "ஆண்டவரே, எங்களை எடுத்துக் கொள்ளும்! இவரை வையுமையா!" என்று சுற்றியிருந்த அன்பர்கள் வேண்டினார்கள். "உம்மை நம்பியிருக்கிறேன், என் ஜீவியம் எல்லாம் உம் கையிலே தான்" என்ற பாட்டைப் பாடினார்கள். கைகள் குளிர்ந்தன. பக்கத்திலிருந்தவர் அருமையாய் தன் கன்னத்தோடு அவர்கைகளைவைத்து சூடுண்டாக்க பிரயாசப்பட்டார். ஆனால் தெய்வ தாசனாகிய வீரசூரியாவின் ஆவி தன் நாதனின் மார்பிலே சாந்தமாய் தூங்கிற்று. இவருக்கு அப்போ வயது முப்பதுதான். அவர் கண்ணைமூடி பக்கத்திலிருந்தவர் அவரை முத்தமிட்டார். எக்காளம் தொனிக்க, கிறிஸ்துவில் மரித்தோர் உயிர்த்தெழும் மகிமையின்

நாள் கிட்டு மளவும் வீரசூரியா தம் ஆண்டவரின் மார்பில் களைப்பாறுகிறார். "கிறிஸ்துவின் சிலுவை என் மனதை கவருகிறது", இது வீரசூரியாவின் வார்த்தைகள். ஆ! அப்படியே அது நம்மையும் கவர நம் ஜீவியமும் அவர் ஜீவியத்தைப்போல் நம் நாதனுக்கு பலத்த சாக்ஷியாயிருக்கும். சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவை பின் செல்ல ஆயத்தமா?

## நாராயணன் வாமன் திலக்.

மகாராஷ்டிராவில் கிறிஸ்தவர்களால் மட்டுமல்ல ஹிந்துக்களாலும் கீர்த்தி பெற்று கிறிஸ்தவ கவியாகிய விளங்கிய நாராயண வாமன் திலக் என்பவரை ஹிந்து மார்க்கத்திலிருந்து கிறிஸ்து வண்டை யிழுத்தது இந்தச் சிலுவை தான். "கிறிஸ்து குரு, மாதாவுக்கு ஒப்பானவர். அவர் அன்புபோல் மறு அன்புண்டோ? எனக்காக, பாவியாகிய எனக்காக, அவர் சிலுவை யேறினார்," என்ற ஓர் அருமையான பாடல் அவர் பாடினதிலொன்று. ஒருநாள் பண்டர் பூர் (வித்தோபா)வின் கோயிலுக்குப் போகும் யாத்திரிகளின் திரள் கூட்டம் நடன ஆரவாரிப்புடன் பாடி 150 மைல் தூர கஷ்டமும் நினையாமல் ஆனந்தித்து போவதைப் பார்த்தவுடனிவர் பரவச மடைந்து மேற்சொல்லிய "கிறிஸ்து குரு, மாதாவுக்கொப்பு", என்கிற பாட்டை

உடனே உண்டாக்கினார். இவரை நானறிவேன். தேசாபிமான மிவர்க் கதிகமுண்டு. தன் தேசத்திற்காக எவ்வித பாடு கஷ்டமுமனுபவிக்க வாஞ்சித்தார். யாராவது நமது தேசத்தை இழிவாய் பேசினால் மனம் பதைத்து வருந்துவார். "என் மாதாவாகிய தேசமே உனக்காக தவிட்டை ஆகாரமாகவும், கந்தையை உடையாகவும் ஏற்றுக்கொள்வேன். என் சரீரத்தை உனக்காக தியாகம் செய்யவும், என் ஜீவனை உனக்காகக் கொடுக்கவும் ஆயத்தம் நான்", என்று ஒரு செய்யுள் பாடியிருக்கிறார்.

"மிஷன் உத்தியோகத்தை விட்டுவிட வேண்டும். சம்பளமில்லாமல் கடவுளின் ராஜ்ஜிய ஊழியம் செய்ய வேண்டும்", என்று 1917ம் வருஷம் அவர் தீர்மானம் செய்தார். "வேலைக்காரருமுக் குண்டோ? பின்னையேன் எனக்கு இந்த பரிவாரம்? அரை வயிறாய் ஆகாரம் அருந்தினவா! அடியேனுக் கேனிந்த

பெருந்திண்டி? தலைசாய்க்கவுமுமக்கிட மில்லையே! பின்னே ஏன் எனக்கிந்த மாளிகை? உம் புல் அணைமேல் என் தலை யையும் சற்று சாய்க்க இடங்கொடையா, கிறிஸ்துநாதா'' என்று பாடியிருக்கிறார்.

சன்னியாசி வேஷமணிந்து "தெய்வ தர்பார்" என்ற ஓர் சங்கம் ஸ்தாபித் தார். "தெய்வ தர்பார்" என்றால் தெய்வராஜ்ஜிய மென்றர்த்தம். அதி னால் எவரிருதயத்தில் தெய்வராஜ்ஜியம் ஸ்தாபனமானதோ அவர்கள்தான் தெய் வதர்பார். ஞானஸ்நானம் பெற்றவர்களா னாலும் பெறாதவர்களானாலும் கிறிஸ்து வின் சீஷரெவரும் இதைச் சேரலாம். கிறிஸ்து மார்க்கம் மேல் நாட்டாரின் சடங்காசாரங்கள் ஜீவிய போக்குகளி னால், நம் தேசத்தாருக்கு அந்நியமாக தோன்றுகிறது. ஆனால் மேல் தேச ஆசார ஒழுக்கங்கள் பாவனைகளில்லாமல் கிறிஸ்துவை நம் தேசத்தாருக்குக் காட் டினால் இந்தியாவின் பக்தர்கள் அவரை

ஏற்றுக்கொள்ளுவார்கள். கிறிஸ்துமார்க்கம் இந்து பக்தர்கள் மார்க்கத்திற்கு விரோதமானதல்ல. அவர்கள் தேடி வாஞ்சித்தவரே கிறிஸ்து. இவ்விதமாக திலக் எண்ணினார். இச்சங்கத்தில் அங்கங்கள் கைக்கொள்ள வேண்டியவை :

(1) கிறிஸ்துவே குருவென்று அவரைப் பின்பற்றல்.

(2) ஜெப ஜீவியம்.

(3) மற்ற அங்கங்களை சகோதரர் சகோதரிகளாக அன்புடன் ஏற்றுக் கொள்ளல்.

(4) வாரம் ஒரு முறையாவது சபை கூடி கடவுளை வணங்குதல்.

(5) தன்னயமில்லாமல் மற்றவர்கள் நன்மையையே கருதி, ஏதாவது ஒரு வேலை அல்லது உதவி செய்தல் முதலியனவே.

இத்தர்பாரின் பிரதிக்கினைகள் :

(1) கிறிஸ்துவே உம்மைப்போல் தரித்திரனாயிருப்பேன்.

(2) உம்மைப்போல் ஊழியஞ் செய்வேன்.

(3) உம்மைப்போல் எல்லாருக்கும் சிநேகிதனா யிருப்பேன், ஒருவருக்கும் பகைஞனாயிருக்கமாட்டேன்.

(4) உம்மைப்போல் சிலுவையில் ஆணியாலடிக்கப்பட எப்போதும் ஆயத்தமாயிருப்பேன்.

(5) உம்மைப்போல் முழுவதும் தேவசித்தத்தை செய்ய பிரயாசிப்பேன்.

(6) உம்மைப்போல் எல்லா மனுஷரிலும் அன்பு கூர்வேன்.

(7) உம்முடைய பலத்தால் உமது சமுகத்திலேயே எப்போதும் நிலைத்திருப்பேன்.

வியாதி மேற்கொண்டு அந்தியகாலம் கிட்டினபோது "இந்த நோவு ஆசீர்வதிக்கப்பட்டது. சிலுவையின் அனுபவம் என் சரீரத்தில் காண்கிறேன்", என்றார். மரிக்கிறதற்கு முந்தின நாள் கடூர காய்ச்சலாயிருக்கும் சமயத்தில் மரணத்திற்கு பயப்படாதிருக்க தன் மனைவிக்கும் மகளுக்கும் புத்தி சொன்னார்.

"நின்மடியில் நான் இளைப்பாறச்செய்
நின்கரத்தினால் என் தலையை சுற்றி அரவணை
நின் திருமுகம் என் கண்முன் தெளிவாக்கு
என் தாயே தந்தையே"

என்று பாடின இவர் ஆவி 1918ஆம் மேமீ 9உ ஆனந்தத்தோடு தெய்வ அழைப்பாகிய மஹா உற்சவத்திற்குள் பிரவேசித்தது.

## நேகெமியா நீலகந்த கோரே சாஸ்திரி.

மேல்காத்து மலைக்கும் சமுத்திரத்திற்கும நடுவிலிருக்கும் கோங்கனி நாட்டு பிராமணர் வம்சம் இவர். ஹிந்து வேத சாஸ்திரங்களில் வித்வசிரோமணி. சுவிசேஷ ஊழியர்களோடு சாமர்த்திய தர்க்கம் செய்து அவர்களை தோல்விக்கும்படி பிரயாசிப்பார். இப்படி விவாதம் செய்வதற்காக கிறிஸ்தவ வேதாகமத்தை அவர் வாசிக்க நேரிட்டது. மலைப்பிரசங்கத்தை வாசிக்கவும் இவர் மனதை அது பலமாய் கவர்ந்துகொண்டது. இது தெய்வ வசனமேவென்று உணர்ந்தார். இருதயத்திலே கிறிஸ்துவின் சீஷனானார். வெளியரங்கமாய் சாக்ஷியிட முதல் பயந்தார். உயர்குல பண்டித சாஸ்திரியாச்சுதே. என்ன துன்பம், சொந்தக்காரருக்கு எத்தனை மனவேதனையுண்டாகும்! சன்னியாசி ஆச்சிரமம் பூண்டு வனவாசம் செய்யும் தன் தந்தையிடம் ஆலோசனை செய்

தார். அவரோ இவரை மூடனென்று எண்ணினர். ஆனால் சிலுவையின் வல்லமை இவரைத் தொடர்ந்தது. பகிரங்கமாக ஞானஸ்நானத்தின்மூலமாய் தான் கிறிஸ்துவின் சீஷனென்று சாக்ஷி பகர்ந்தார். தன் சகோதரனையும் மனைவியையும் அப்படியே கிறிஸ்துவின் தொண்டராக்க மிக பிரயாசமெடுத்தார். மனைவி இவரைச் சேர்ந்தார்கள். ஆனால் ஓர் குழந்தை பிறந்த பின் விசுவாசியாக இறந்து போனார்கள். சகோதரனோ, முதல் விசுவாசம் காட்டினவர், பின்வாங்கிவிட்டார். பண்டித ராம பாயம்மாள் கிறிஸ்துவை விசுவாசிக்க இவர் ஓர் பலத்த கருவியாயிருந்தார். இவர் கிறிஸ்துவுக்காக பகர்ந்த சாக்ஷி அந்த அம்மாள் இருதயத்தைக் கவர்ந்தது. ஒருதடவை இன்னொரு பாதிரியாரோடு ஓர் ஊரின் நடுவில் வீடெடுத்து சுற்றியுள்ள ஏழை ஜனங்கள்போல் தரித்திர ஜீவியம்செய்து நாள் முழுவதும் அவரிடம் வந்தவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தார்.

இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது, அங்கு ஜனங்களுக்குள் காணப்பட்ட லௌஹீகத்தையும், கிறிஸ்து மார்க்கத்திற்கு ஏற்காத நடபடிக்கைகளையும்கண்டு மனம் வாடி தவித்தார். இவர் மனுஷருக்குப் பயந்தவரல்ல. திரும்பி வரும்போது, கப்பலில் ஐரோப்பிய ஆண்களும், பெண்களும், (விவாகம் செய்தவர்கள்கூட) மானவெட்கமில்லாமல் நடப்பித்த காரியாதிகளைக் கண்டு ஞாயிறு தான் ஆராதனை நடத்தும்போது வெகு தைரியமாய் அவர்களை கண்டித்துப் பேசினார். அங்கிருந்த "துரை" களுக்கு இது மிக கோப முண்டாக்கிற்று. இந்த "கறுப்பனை" கடலில் தூக்கி எறிந்து விட வேண்டுமென்று, அவர்கள் கோபமாய் பேசி, கப்பல் மாலுமியிடத்தில் "இவனை இனி ஆராதனையில் பேச விடக்கூடாது" என்று முறையிட்டார்கள்.

இங்கிலாந்தி லிருக்கும்போதும் இந்தியாவில் ஆங்கிலர் சுவிசேஷ வேலை செய்வ

தற்கு அவர்களிடத்திலிருக்கும் தடைக் ளைக்குறித்து தெளிவாய் பேசினார். "உல கத்தின் ஜனங்கள் தங்களை யுத்தத்தில் தோற்கவைத்து அடக்கி கீழாக்கி ஆளும் அதிகாரிகளின் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் தங்களை ஜெயித்தவர்களை அவர்கள் வெறுப்பார்கள். இப்படி வெறுக்கிறவர் களுடைய கொள்கைகளை, மார்க்க விசுவா சத்தை எப்படி அவர்கள் அங்கீகரிப்பார் கள்? ஆங்கிலருக்கு வைதீக பக்தியே கிடையாது என்பது எங்கள் தேசத்தா ரின் அபிப்பிராயம். சுவிசேஷம் பரவ இது முதல் தடை. மேலும் நீங்கள் அனுப்பும் மிஷனரிகள் பற்பல விபரீத மான சபா கொள்கை சடங்குகளைப் போதிக்கிறார்கள். நீங்கள் போதிக்கிற சத்தியத்திற்கு இது அனுகூலமல்ல. இது இரண்டாவது தடை. மூன்றாவது இந்தியாவில் ஐரோப்பியர் ஐரோப்பிய முறைப்படி உடுக்கவும் உண்கவும் ஜீவிக் கவும் வேண்டியதிருக்கிறது. இந்திய

ரைப்போல் ஜீவிக்க அவர்களால் முடிய வில்லை. தங்கள் உடன்தேசிகளான ஆங் கில, கச்சேரி அல்லது பட்டாளா, உத்தி யோகஸ்தர் சகவாசத்தைநாடி, அவர்கள் போல் மிஷனரிகள் ஜீவிக்கிறார்கள். ஆனால், எங்கள் தேசத்திலே புதுமார்க்க பிரசங்கிகள் தங்கள் மார்க்கத்திற்காக சுயவெறுப்பைக் காட்டவேண்டுமென்று, எதிர்பார்க்கிறோம். சாதாரணமாக ஐரோப்பிய மிஷனரிகளுக்கு இது முடிய வில்லை. பின்னும் விவாகம் செய்திருக் கும் ஐரோப்பிய மிஷனரிகள் தங்கள் குடும்பத்தினிமித்தம் சுய வெறுப்புக் காட்டமுடியா திருக்கிறார்கள். இதினால் பிரம்மாச்சாரிகளான ஐரோப்பியர் இந்தி யாவில் சுவிசேஷ வேலைக்கு அதிக உதவி யாயிருப்பார்கள். சுவிசேஷ வேலை இந்தி யாவில் பலமாக, இந்தியகுருக்கள் அதிகம் அவசியம்'' என்று சொன்னார். இந்தியா வில் கற்றவர்களுக்குள்இருக்கும் லௌஹீ கம் பரம விஷயத்தில் அசட்டை, முதலி யவை அவருக்கு மிகவருத்தம். கிறிஸ்து

மார்க்க சத்தியங்களைவற்புறுத்தி நியாயம் கூறி, பல புஸ்தகங்கள் இவர் எழுதியிருக்கிறார். மிகுந்த மனத்தாழ்மையுள்ளவர். தன்னைப்பற்றி நல்லபிப்பிராயம் கிடையாது. தன்மேல் நம்பிக்கை வைக்கமாட்டார். ஆனால் கடவுளின்மேல் விசுவாச பலமிருந்தது. சரீர பெலவீனத்தால் பின்காலத்தில் மிகவருந்தினார். ஆனால் தேவ சமாதானம் அவர் இருதயத்தில் நிறைவாயிருந்தது. 1895-ம் வருஷம் அக்டோபர் மாதம் 29-ம் தேதி கிறிஸ்துவில் இளைப்பாறுதலடைந்தார்.

# கிருஷ்ண பிள்ளை.

மனம் பரவசமாகும்படி தன் முழுஇரு தயத்தோடும் அனுபவசாக்ஷியாக இயேசு கிறிஸ்துவின் சிலுவையினருமையும் இர க்ஷிப்பின் நிச்சயத்தையும் குறித்து சொற், சுவை, பொருள், மூன்றும் ஒத்திருக்க பாடியிருக்கும் கவிராய வித் வானிவர். இவர் இயற்றியிருக்கும் இர க்ஷணிய யாத்திரிகம், இனிய தேவாரங்க ளடங்கிய இரக்ஷணிய மனோகரம், என்ற கவிகளை தங்கள் உள்ளான வைதீக ஜீவி யம் வளர்ந்தோங்க பாடியனுபவித்திருப் பவர்களுக்குத்தான் தெரியுமிவரருமை. திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரமத்தில் அதிகாலையிலே இருட்டோடே எழுந்து ஏக குடும்பமாக இவர் இயற்றியிருக்கும் விசுவாச (சிலுவைக்)காட்சியாகிய தேவா ரத்தையும், காலைத்துதிகளையும் பாடி பர வசமடையும் எங்களுக்கு கிருஷ்ண பிள்ளை மரித்தும் பேசுகிறார்.

" கள்ளமுறுங்கடையேனுங் கடைத்தேறப்
பெருங்கருணை
வெள்ளமுகந்தருள்பொழியும் விமலலோ
சனநிதியை
உள்ளமுவப்புறுதேனை யுயிர்க்குயிரை யுலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக்
கண்டேனே."

என்றும்,

" கனவிருள கற்றியிக்காலை யுய்த்தல்போன்
மனவிருள தனையுமாற்றி நீதியின்
தினகரனருள் வழிசெலுத்தி யென்னையாள்
அனகனே நின்னடிக் கனந்தஸ்தோத்திரம்.

---

ஐயமேலி லிடமாணுந்த காரம்வந்
தொய்யன மூடிநின்றுடற்றுமாயினுந்
துய்யபங்கய முகஜோதி காட்டியாள்
அய்யனே நின்னடிக் கனந்தஸ்தோத்திரம்."

என்றும் மற்றுமிவரியற்றியிருக்கும்தேவா ரங்களையும் அதிகாலையில் பாடுகிறோம். சாந்தமும் மனத்தாழ்மையு மணிந்தவர்.

“அவர் சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை”, என்று நம்பெருமானைக் குறித்து வேதமொழி யுரைப்பதுபோல இவரைக் குறித்தும் சொல்லலாம். இவர் தம் சாக்ஷியை சந்தை வெளியிலும் தெரு வீதிகளிலும் “பன்றிகளுக்குமுன் முத்துக்களை வீசுவதுபோல்” வீணருக்கு முன் கதறி கூவாமல் தம் அமைதியான பரிசுத்த ஜீவியத்தினாலும், விடாமுயற்சியாய் மனுஷர்மேல் கொண்ட அன்பினாலும், ஆத்மதாகத்தினாலும், பலரை கிறிஸ்துவின் சீஷராக்கினார். மிகுந்த தாழ்மையுள்ளவர். தன் கவிகளில் கிறிஸ்துபகவானின் அளவற்ற புகழமைந்த புண்ணியக்கிருபையையும், தன் அற்பத்தனத்தையும், பாவநிலையையும், ஒப்பிட்டு தன்னை நாயென்றும், தூர்த்தரிலும் தூர்த்தனென்றுமழைத்து தாழ்த்திக்கொள்வார். மிக தயாள சிந்தை. வீட்டில் எவர் எந்த நேரம் வந்தாலும் பசியாயனுப்பி விடமாட்டார். தன் ஆகாரத்தை அவருக்குக் கொடுத்துபசரிப்பார். தன்

மாணவரோடு அன்பு பாராட்டி, சகவாசம், சம்பாஷணை செய்வார். சத்தியவான், பொய்யை அருவருப்பார்.

திருநெல்வேலி ஜில்லாவில் பாளையங்கோட்டைக்கு தென் கிழக்காய், இரட்டியாபட்டி என்ற சிறு கிராமமிருக்கிறது. பக்கத்தில் ஓர் சிறு குன்று. நான் சிறுவனயிருக்கும்போது இந்த ஊரிலிருந்து இரட்டிச்சிகள் பயிறு அல்லது நெய்விற்க பாளையங்கோட்டைக்கு வருவார்கள். "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையுண்டாகக் கூடுமோ?" என்று முற்காலத்தில் யூதர்கள் நம் பெருமான் வளர்ந்த ஊரை இகழ்ந்தது போல் "இரட்டியா பட்டியிலிருந்தும் இரக்ஷணிய யாத்திரிகம் வருமோ?" என்று நாம் கூறினும் தகும். ஓர் சிறிய பட்டிக்காடுதான். இதில் வைஷ்ணவ பக்தனயிருந்த சங்கரநாராயண பிள்ளையின் மூத்த குமாரன் கிருஷ்ண பிள்ளை. புத்திரன் வேண்டுமென்று பெற்றோர்கள்

மிக தவஞ் செய்தபின் 1827-ம் வருஷம் ஏப்ரில் மாதம் 23-ம் தேதி கிருஷ்ண பிள்ளை பிறந்தார். ஏழு வருஷத்திற்குப் பின் இன்னொரு ஆண் குழந்தையும் பெற்று முத்தையன் என்று பேர் தரிக்கப்பட்டார். தகப்பனார் இருபுத்திரர்களுக்கும் பாலியத்திலே ராமாயணம், திருவாய்மொழி முதலிய கவிகளை கற்றுக் கொடுத்து வந்தார். நான்கு வயதிலேயே கிருஷ்ணபிள்ளை கம்ப ராமாயணக் கவிகளை படித்து பொருளர்த்தம் சொல்வாராம். பின்காலத்தில் இவருக்கு கிறிஸ்தவ கம்பர் என்று பெயரிடப்பட்டது.

இவர் தம்பி முத்தையாபிள்ளை வாலிபப் பிராயத்தில் பாளையங்கோட்டையில் தனக்கோடிராஜ், மனகாவலப் பெருமாள் பிள்ளை என்ற இரண்டு வாலிபரோடு நெருங்கிய சிநேகிதரானார். அக்காலத்தில் அங்கிருந்த மிஷன் பாடசாலையில் அந்தகனாய் சரீர பார்வையற்றிருந்தும், தெய்வீகபத்தனாய், கிறிஸ்துவின் பிரகா

சம் பொருந்தியிருந்த பிரதம உபாத்தி யாயர் ஒருவரிருந்தார். இவர் பேர் குருக் ஷான்ஸ். மேற் சொல்லிய முத்தையபிள் ளையின் இரு நண்பர்களும் இவ்வுபாத்தி யாயரால் கிறிஸ்துவின் அன்பை யுணர்ந் தறிந்தார்கள். ஆகவே மூன்று இஷ்ட ரும் ஏகமனதாக கிறிஸ்துவின் பகிரங்க சீஷராகத் தீர்மானம் செய்தார்கள். ஆனால் முத்தையபிள்ளைக்கு ஞானஸ்நா னம் கொடுக்கவேண்டிய மிஷனரி இவர் தம் குடுமியை யெடுத்தாலொழிய தீக்ஷை கொடுக்க மாட்டேனென்றார். புறதேச மிஷனரிகளுக்கு இந்திய ஆசாரங்கள் ஒழுக்க பழக்கங்கள் அடிக்கடி விளங்குகி றதில்லை. குடுமி "அஞ்ஞானத்தின்" அடையாளமாம்.

மேலும் "அஞ்ஞானப் பெயரை" மாற்றவேண்டும். முத்தையனை "எட் வர்ட்" என்று மாற்றவேண்டும். கிருஷ் ணனை "ஹென்ரி ஆல்பிரெட்" என்று ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும். "முத்

னையனும் கிருஷ்ணனும்'' அஞ்ஞானமாளுல் "எட்வர்டும்" "ஹென்ரி ஆல்பிரெடும்" எப்படி மெஞ்ஞானமாகிறதோ, இந்த ஞானம் என்னவோ?

இதுவுமல்லாமல் கிறிஸ்தவன் மாம்சம் சாப்பிடவேண்டும்.

இவையெல்லாம் நினைத்தால் விநோதமும் சிரிக்கத்தக்க காரியமுமே. ஆனால் இவ்வித மூட வழக்கங்களினுல் நாம் கிறிஸ்து மார்க்கத்தை நம் தேசத்தார் சரியாய் நிதானித்தறியாதபடி தடை செய்கிறோம்.

முத்தையாபிள்ளை தன் பிற்காலத்தில் "(சுதேச) கிறிஸ்தவர்களின் ஆசாரமும் (புறதேச) குருக்களின் போதனைகளும்" என்ற ஓர் புஸ்தகத்தில் இவைகளைக் குறித்து விஸ்தாரமாய் எழுதியிருக்கிறார். இப்புஸ்தகத்தின் முகவுரையில் யோவான் தேவசகாயம் சவரிராய பிள்ளை ஹிந்து மார்க்கத்திலிருந்து கிறிஸ்துவின் தொண்டராகிறவர்களுக்கு பிற்காலத்திய கிறிஸ்

தவ சபா சிரேஷ்டராலும், சபைகளாலும் உண்டாகிற மனவருத்தங்களையும் கஷ்டங்களையுங் குறித்து எழுதியிருப்பதை இங்கு சொல்ல விரும்புகிறேன். அதாவது "ஓர் ஹிந்து கிறிஸ்தவ சபையை சேருமுன் அவர் கவனமெல்லாம் கிறிஸ்துவின்மேலிருக்கிறது. ஆனால் சபையை சேர்ந்தபின் கிறிஸ்துவின் மேல் பலமாய்தரித்திருந்த அவர் கவனம் இப்போ சபையின்மேல் செல்லுகிறது. இது வெகுமோசமான காரியம். சாத்தானின் சோதனையின் வேளை. புதிதாய் கிறிஸ்தவரானவரின் விசுவாசம் தடுமாற ஏதுவாகும்." குடுமிக்கும் வைதீக விஷயங்களுக்கும் யாதொரு சம்பந்தமில்லை யென்று முத்தையாபிள்ளை ஒரே தீர்மானமாகத் தன் குடுமியை யெடுக்கமாட்டேனென்றார். மிஷனரியும் குடுமியெடுக்காவிடில் ஞானஸ்நானம் கொடுக்கமாட்டேனென்று நின்றார். இப்படி பலமாதங்கள் கடந்தபின், குருக்கள்கூடி, ஆலோசனை செய்து முத்தையாபிள்ளையின் அபிப்பிரா

யத்திற்கிணங்கி, முத்தையாபிள்ளைக்கும், இவர் நண்பர்கள் தனுக்கோடிராசுக்கும், மனகாவலப்பெருமாள் பிள்ளையவர்களுக்கும், ஞானஸ்நானம்கொடுத்தார்கள். இச்சங்கதியைக் கேள்விப்பட்ட கிருஷ்ண பிள்ளையும், அவர் தாயாரும், வியாகுலமும் மனவேதனையுமடைந்து தவித்தார்கள். அச்சமயத்தில் கிருஷ்ணபிள்ளை மிஷனில் தமிழ்பண்டிதர் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். மனங்கொதித்துப் பொங்கிக்கொண்டிருக்குமிவரை ஹக்ஸ்டபிள் குருவானவர் அழைத்து "கிறிஸ்தவனுவதற்கு உமக்கு இனி என்ன தடை? உமது சகோதரன் கிறிஸ்தவனுகிவிட்டானல்லவா?" என்றார். இது "எரிகிற தீயில் எண்ணெயைக்கொரிவிட்ட" மாதிரியிருந்தது. இதுமட்டுமிவர் சொல்லவும் வந்துவிட்டதாவென்று கிருஷ்ணபிள்ளை மனம்கொதித்து "நான் கிறிஸ்தவனுவதும் ஆகாமலிருப்பதும் என் இஷ்டம். இக்கேள்வி என்னத்திற்காக கேட்கிறீர்கள்?" என்று கோபத்தோடு சொல்லி உடனே

வெளியே வந்து மிஷனில் வேலை வேண்டாமென்று இராசினுமாவெழுதி குருவானவர்க்கு அனுப்பிவிட்டார். குரு மிக மனவருத்த மடைந்து தன் குற்றத்தை யுணர்ந்து, அதே சாயந்திரம் கிருஷ்ணபிள்ளையை அழைத்து, "இனி நீர் கிறிஸ்தவனுகிற விஷயத்தைக் குறித்து உம்மிடத்தில் பேசேன். வேலையை இராசினுமா கொடுக்க வேண்டாம்" என்று பட்சமாக பேசி அனுப்பினார்.

இதன்பின், கிறிஸ்துவின் சீஷனுகிய தனுக்கோடிராசுக்கும் கிருஷ்ண பிள்ளைக்கும் நெருங்கிய சிநேகமுண்டாயிற்று. சிநேகபாந்தத்தினுல் கிறிஸ்து வண்டையிழுக்கப்பட்டார். பாவ உணர்வும் உண்டாயிற்று. இஷ்டரின் புத்திமதியின்படி சுவிசேஷத்தை செபத்தோடு வாசித்து ஆராட்சிசெய்து வந்தார். தன் மனவிருளகற்ற கடவுளை தினமும் பிரார்த்தித்துவந்தார். ஒரு நாள் இரவு தனுக்

கோடிராசுவுமிவரும் பேசிக் கொண் டிருந்து இவர் வீடு திரும்பினர். அன்றி ரவே கிறிஸ்துபகவானின் ஒளி பல மாய் இவர் உள்ளத்தில் வீசிற்று. அவர் சொல்வது "அன்றே கிறிஸ்துநாதரை யறிந்தேன். அன்றேயவர் திருநாமத் தைமுன்னிட்டு ஜெபம் செய்யத் துணிந் தேன். அன்றே வெகு நாட்களாக மதுர மாகவிருந்த பாவதோஷங்கள் யாவும் கசப்பாக மாறின. அன்றே கிறிஸ் துவை வழிபட தீர்மானித்தேன், அன் றைக்கே ஞாபகார்த்தமாக ஒரு செய் யுள் எழுதிவைத்தேன்; அன்றே தெய்வ மென்னிதயத்தையும், அவரைத்துதிக்க என் வாயையும் திறந்தார்.

கருணையங்கடலே அந்தகாரமாம் விளையைப்
போக்கு
யருணனே அடியேற்காக ஆருயிர் விட்ட
தேவே
பொருணயங் தெரியாத்தீய புல்லியலெனையா
யிகாள்ளத்
தருணமெண்ணிதய நிற்க சமாப்பணந்தரும
மூர்த்தி."

பகிரங்கமாக ஞானஸ்நானத்தின் மூல மாக கிறிஸ்துவின் தொண்டனென்று சாக்ஷி பகர்ந்தார். அநேகரை தமது தயாள அன்பினுலும், விடாமுயற்சியினு லும் தம் ஆண்டவரிடமிழுத்தார். இவ ரன்பின் பிரயாசத்தினுல் இவர் மனைவி யும் தாயும் கிறிஸ்தவர்களானுர்கள். அதிகாலையிலெழுந்து பக்தியோடு பாடி யிருக்கும் தேவாரங்கள் தமிழ் கிறிஸ்த வர்கள் உள்ளங்கனிய பாடி பரவசமாகச் செய்யக்கூடியன. இவர் இயற்றியிருக்கும் இரக்ஷண்ய யாத்திரிகம், இரக்ஷண்ய மனேகரம் என்ற செய்யுட்கள் மிக கீர்த்தி பெற்றவை.

அக்காலத்தில் பாளையங்கோட்டையி லிருந்த கிறிஸ்தவர்களின் ஸ்திதியை இவர் வருணித்திருப்பது இவ்வாறு. " அக்காலத்து முருகன்குறிச்சி கிறிஸ்த வர்களும் மற்ற கிராமத்திலிருந்து வரத் துப்போக்காயிருந்த கிறிஸ்தவர்களும் புதிதாக கிறிஸ்தவர்களான நாங்களும்

ஒருவருக்கொருவர் காட்டின அன்பும், பட்சஐக்கியமும், விகற்பின்மையும், மதிப்பும், கொஞ்சமல்ல. வாரத்திற்கொரு முறை கிரமமாக வீடுதோறும் ஜெபக் கூட்டமிருக்கும். நாங்கள் பணம்சேர்த்து சுவிசேஷ பிரசாரண மண்டபமொன்று கட்டுவித்துப் புதிய கிறிஸ்தவர்கள் பிரதி தினமும் முறைப்படி யவரவர் வேலை நேரம் போக மீதியான நேரத்தில் பாட்டையில் போக்குவரத்தாயிருந்த ஜனங்கட்கு சுவிசேஷத்தைச் சொல்லி வந்தோம், நல்லொழுக்கம், சன்மார்க்க சம்பாஷணை, பரோபகாரம், முதலிய சத்கருமங்கள் நாளுக்குநாள் விருத்தியாகி கிறிஸ்தவ சபை செழிப்புள்ள சிங்காரமான ஒரு நந்தவனம்போல் பரிமளம் வீசிக்கொண்டிருந்தது. வருஷத்தில் ஒருமுறை சுதேச கிறிஸ்தவர்களில் உத்தமோத்துங்கரான நாகர்கோவில் தேவதாசன் ஐயர் வந்து இந்த நந்தவனத்தில் களைபற்றவிடாமல் பக்குவம் செய்து ஜீவ தண்ணீரை பூரணமாக நிரவிப்

போவார். அந்நீதிமானுல் முருகங் குறிச்சி சபையாருக்கு உண்டான நன்மைகள் கொஞ்சமல்ல." பாளையங் கோட்டை சபையின் தற்கால ஸ்திதியை நாம் இதோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

கிருஷ்ணபிள்ளை இயற்றிய நூல்களில் மிகவும் கீர்த்திபெற்றது "இரக்ஷணிய யாத்திரிகம்" என்னும் செய்யுளே. கடவுள் எத்தனை மகிமையாயும், எவ்வளவு அன்புடனும், மனுஷரை சிருஷ்டித்து தமது ராஜ்ஜியத்தை பூலோகத்தில் ஸ்தாபித்திருக்க, பிசாசின் ஏவுதலினுல் மனுஷர் கெடவும், சாத்தானின் அரசாட்சி பூலோகத்தில் பலமாகவும் நேரிட்டுவிட, எப்படி கடவுள் தமது ஒரே பேருன குமாரனுகிய இயேசுகிறிஸ்துவினுல் சீர்கெட்ட மானிடர், திரும்பவும் புது பிறப் படைந்து தேவ மக்களாகவும், பூமியிலே பிசாசின் சோதனைகளோடு போர்புரிந்து தெய்வ பக்தரின் யாத்திரையை ஜெயத்

தோடு முடிக்குமளவும் தம் ஆண்டவரின் கிருபையால் பலமடையவும், கடைசியில் நித்திய ஜீவனையடையவும் செய்தார் என்பதை இந்த நூலில் வருணித்திருக்கிறார். இது கம்பராமாயண நூல் தழுவி இயற்றப்பட்டது. சொற், சுவை, பொருள் முழுவதும் நன்கமைந்து உயர்தர தமிழில் எழுதப்பட்டிருக்கிறது.

தமிழ் செய்யுட்கள் சாதாரண ஜனங்கள் லகுவாய் பொருளார்த்தம் செய்து கொள்ளும் வண்ணம் எழுதப்படவில்லையென்று பல தமிழ் நண்பர் சொல்லி தமிழ் நூற்களை அசட்டைசெய்து தள்ளிவிடுகிறார்கள். இதைக்குறித்து கிருஷ்ண பிள்ளை சொல்வதாவது:—" இங்கிலீஷ் பாஷையைக் கற்கும் அநேகர் தமிழ் சுய பாஷையானதால் அது தானே வரத் தக்கது, பிரயாசப்பட்டு படிக்கவேண்டியதில்லை என்கிற எண்ணத்தினாலும், படித்தாலும் தற்காலத்திற் பயனில்லையென்கிற வெறுப்பினாலும், கற்க வேண்டிய

காலத்தில் தமிழ் இலக்கியங்களில் ஒன்றையாவது கற்றுக்கொள்ளக் கவலைப் படாமல் மெத்த அசட்டை செய்து விட்டு, அப்புறம் ஏதோ ஒருகாலத்தில் சமயம் நேரிடும்போது தமிழ் செய்யுட்களில் இரண்டொன்றைமட்டும் வாசித்துப்பார்த்து, அது தங்களுக்கு விளங்காமையினிமித்தம் பிரயோஜனமில்லை யென்றெறிந்து விடுகிறார்கள். இது தமிழ் செய்யுளின் குற்றமல்ல. இங்கிலீஷ் இலக்கியத்தில் தேறுவதற்குச் செல்லுங் காலத்திலும் படும் பிரயாசத்திலும், பத்திலொரு பாகமாவது (நூற்றிலொரு பாகமாவது! ச. எ.) தமிழ் இலக்கியத்திற்கு உபயோகப்படுத்தி, அதன்பேரிற் குறை சொல்வார்களானால் அது ஒரு வேளை நியாயமாயிருக்கும். அப்படிக் கின்றி, தமிழில் ஒரு நூலையாவது ஒரு வருஷமாவது தீரத் தெளியச் செவ்வையாய் படியாமல் எடுத்த செய்யுள் தமக்கு விளங்கவில்லையென்று குறை சொல்வது சரியல்ல. கூர்மை புத்தியுடைய எவரா

வது இரண்டு வருஷம் தமிழ் இலக்கியங்களிற் பழகுவாராளுல் எடுத்த காவியத்துக்கு அர்த்தம் சொல்ல அருகராவார் என்பது யாவரும் அநுபவமாயறியக் கூடிய விஷயமே".

கிருஷ்ண பிள்ளை ஓர் சிறிய கிராமத்தில்தான் பிறந்தவர் என்பதை நாமுணரும்போது நம் தமிழ் நாட்டிலுள்ள எண்ணுதற்கரிய பல வாயிரங் கிராமத்தினின்று கடவுளால் தெரிந்து கொள்ளப் பட்ட இன்னும் எத்தனை சாஸ்திரிகள், ஞானிகள், புலவர், கவிகள், தேவ மகிமைக்கென்று மகத்தான காரியங்களை செய்யத்தக்கவர் உதிக்கமுடியும்! ஆனாலும் ஐயோ! நம் மட்டான புத்தியினாலும், மூடத்தனத்தினாலும், தன்னயத்தினாலும், நம்மை ஆளும் அந்நிய ஆங்கில அதிகாரிகள் ஜனங்களின் நன்மையை எல்லாவற்றிலும் சிரேஷ்டமானதாக எண்ணாமல், தங்கள் துரைத்தன கௌரவத்தையும் சுயமேன்மையுமேநாடி,

தங்களுக்கு சுலபமாயிருக்கும்படி உயர் கல்வியும் துரைத்தன பேச்சும் தங்கள் சுயபாஷையாகிய ஆங்கிலமாகச் செய்து விட்டதாலும், நம் தாய்பாஷை இகழப் படவும் வெறுக்கப்படவுமாயிற்று. இதி ஞல் கல்வி, அந்நிய பாஷை படிக்க உபா யம் தெரிந்த, மிகவும் சிற்சிலர் வசமா யிற்று. நம் நாட்டுத் திரள் உயர் கல் விக்கு அந்நியராய் போனூர்கள். படித்த நாமும் அவர்களுக்கு அந்நியராய் போனேம். ஐயோ! எப்போ நாம் நம் மைக்குருடாக்கி, நம்மையும் நம் நாட்டை யும் முன்னுக்கு வரத் தடைசெய்கிற அந் நியபாஷையின் முக்காட்டைகளைந்து, நம் ஜனம் முன்னேற பிரயாசப்படுவோம்! அந்த நாளிலே இப்போ பரிதாப ஸ்திதி யிலிருக்கிற நம் கிராமங்களிலிருந்து மகான்களும், கவிகளும், வல்லமை யோடு மற்றவர்களுக்கு ஆசீர்வாதமளிக் கும் தெய்வபக்தர்களும், இப்பூலோக காரியங்களிலும், கலைகளிலும், ஜொலிக் கும்சாஸ்திரிகளும், சிற்பசாஸ்திரிகளும்,

வித்வான்களும் உதித்து நம் நாட்டை ஜீவதண்ணீரோடும் நந்தவனமாக்குவார்கள்! தமிழ் நாடு பாக்கிய நாடாகவும், பூலோகத்திற்கு நன்மையை யுண்டாக்கும் ஆசீர்வாத நாடாகவுமிருக்கும். கிறிஸ்துவின் கிரீடமாக விளங்கக்கூடிய எத்தனை கிருஷ்ண பிள்ளைகள், எத்தனை மாணிக்கவாசகர்கள், எத்தனை தாயுமானவர்கள், எத்தனை தேவதாசன் போதகர்கள், எத்தனை திருவள்ளுவர்கள், எத்தனை அவ்வைகள், எத்தனை மற்றும் பெரியோர் நம் கிராமங்களிலிருக்கிறார்களோ யாருக்குத் தெரியும்!

கிருஷ்ணபிள்ளை தமது அந்தியகாலத்தில் அதிகாலையில் பக்தியோடு பாடுவார். சரீர பெலவீனம் மேலிட்டாலும் இவர் உள்ளான கிறிஸ்துவின் ஜீவியம் பலப்பட்டுவந்தது. 1900 வருஷம் பெப்ரவரி மாதம் 3-ம் தேதி "இயேசு" என்ற பெயரை தம் விரலினால் எழுதிக் கொண்டே சாய்ந்து நம் பெருமானின்

மார்பில் முகமலர்வோடு நித்திரையடைந்தார்.

கிருஷ்ணபிள்ளை மரணமடையும்போது எனக்கு 17 வயது. ஒரு புஸ்தகத்தில் தினசரி சம்பவங்களை (diary) நான் எழுதுவதுண்டு. 1900 வருஷம் ஜனுவரி மாதம் 4-ம் தேதி வியாழன் நான் எழுதியிருக்கிறதாவது.—H. A. கிருஷ்ணபிள்ளையவர்கள் மரணத்தறுவாயிலிருக்கிறார்கள். கடவுள் இந்த அந்தகார வேளையில் அவர் சகாயராயிருப்பாராக.

சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்
சாவின் மேலும் வெற்றி தந்து
என்னை சேர்க்கும் மோட்சத்தில்
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்.

---

நோயுற்றோரைக் கண்ணோக்கிடும்,
தூக்கிப்போர் சிசுபோலவே
அமர்ந்து தூங்கச் செய்யுமே.

அதே வருஷம் பெப்ரவரி 4-ம் தேதி நான் (டைரி) புஸ்தகத்தில் எழுதியிருப்பது—"கிருஷ்ணபிள்ளையவர்கள் நேற்று மத்தியானம் மரணமானார்கள், அவர்கள் சரீரம் இன்று காலை அடக்கம் செய்யப்பட்டது. அவர்கள் மூத்த மகளும், கடைசி மகளும் மிக வியாதியாயிருக்கிறார்கள். இந்த குடும்பத்திற்காக என் மனம் பரிதபிக்கிறது. ஆண்டவருக்கெல்லாம் தெரியும். அவர் தமது திருவுளத்திற் கேற்க எல்லாம் செய்யப்படும்."

## பண்டித ராமபாய்.

ஏழை விதவைகளுக்காக உன்னதமான வேலை செய்துவந்த தெய்வ பக்தினியாகிய பண்டித ராமபாய் சரித்திரம் எல்லாருக்கும் தெரியுமே. ஆனால் மேகம் போன்ற திரளான இத்தனை சிலுவையின் சாக்ஷிகள் நம்மைச் சூழ்ந்திருக்க நீங்களும் நானும் சும்மா இருக்கத்தகுமா? சிலுவையைக் குறித்து அருமையாய் பாடித் தியானித்துத் தங்கள் ஓட்டத்தை வெற்றியோடு முடித்த சிலுவையின் பக்தர்களைப்புகழ்ந்து, சற்றுநேரம் நம் உள்ளத்தில் பரவசமடைந்தால் போதுமா? இக்காலத்தில் நம்தேசத்தின் ஸ்திதி இப்படியோ அப்படியோ வென்றிருக்கிறது. புத்திமான்களும் மெய் தேசாபிமானிகளும் திகைத்துக் கலங்குகிறார்கள். மெய்யாய் ஜனங்களுக்குச் சேவகம் செய்ய வேண்டுமென்று ஆசிக்கிறவர்களுக்கு முன், மலைபோன்ற தடைகள்எழும்பி நிற்

கின்றன. இச்சமயத்தில் கோழை நெஞ்சைக்காட்டி அதைரியப்படுகிறவர்களினால் இத்தேசம் ஒரு நன்மையுமடையாது. ஊக்கமும் மனதீர்க்கமும்வேண்டும். கடவுள் நமக்கு அருளின தரிசனம் நிறைவேறும்படி விடாப் பிடியாய் நாம் தொடர்ந்து முன்செல்லவேண்டும். இந்த சந்ததியாராகிய நாம் ஒரு பெரிய சரித்திரத்தை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறோம். இச்சமயத்தில் சிலுவைக்கொத்த சுயவெறுப்பமைந்த நம் ஜீவியத்தினால் பின்வருபோருக்கு ஆசீர்வாதமும் பாக்கியமும் உண்டாவதற்கான சரித்திரம் எழுதப்படப்போகிறதோ, அல்லது பின் வருவோருக்கு நம் ஜீவன் சாரமற்றதும் பலனற்றதுமான காரியமாய் முடியுமோ ?

நம் பெருமான் சிலுவையில் மரித்தபோது தோல்வி யடைந்தவர்போல் தோன்றிற்று. போர்வீரர் அவர்மேல் ஆணி கடாவினார்கள். யூதர்கள் நகைத்து

இகழ்ந்தார்கள். அவர் சிஷர்கள்கூட ஓடிப்போய் விட்டார்கள். அவர் ஜீவி யமே வீணாய் போனதுபோல் தோன் றிற்று. ஆனால் இதோ பாருங்கள்! பூலோகசேனாதிபதி, வெற்றி வேந்தரும், சக்கரவர்த்தித் தனங்களும், ஒழிந்து போயின. ஜூலியஸ்சாயன், மகா அலக் சாந்தர், மகம்மதுகஜினி, நப்போலியன் முதலிய வெற்றி சிறந்த மகிமையா யாண்ட வேந்தர்கள் இப்போ எங்கே? அவர்கள் ராஜ்ஜியம் எங்கே! அவர்கள் பிரஜைகள் எங்கே! ஆனால் நம் பெருமா னுக்காக தங்களை ஆனந்தத்தோடு மா ணத்திற்கும் ஒப்புக்கொடுக்க ஆயத்தமா யிருக்கும் பக்தரின் திரள் உலகமெல்லா மிருக்கின்றன. அவர் பெரியோரும் சிறி யோரும் வணங்கும் ராஜாதி ராஜனாய் விளங்குகிறார்.

அப்படியே என் அருமை நண்பர்களே, உங்களையும் நீங்கள் தத்தம் செய்து சுய வெறுப்புக் காட்டினால், உலகம் உங்களை

புகழ்ந்தாலுமோ, இகழ்ந்தாலுமோ, அது அக்கரையில்லை. ஜீவனுள்ள கடவுளின் முன்னேயும், வரப்போகிற சந்ததியாரின் முன்னேயும், உங்கள் ஜீவியமும், அதின் வல்லமையும், தலைமுறை தலைமுறையாய் ஜொலிக்கும்.

சிலுவையின் உத்தம சாக்ஷியாய் நாமெல்லாரும் நம் தேசத்தில் விளங்க பகவானாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை நம்மனைவரோடுமிருப்பதாக.